## (உ) நாணயத்தினதும் வங்கித்தொழிலினதும் போக்குகள்

1962ம் ஆண்டைப் போலவே 1963ம் ஆண்டிலும், நிதித்துறையில், முரண்பாடான நாணய இயக்கங்கள் பிரதிபலித்தன.[1] அந்நிய கொடுக்கல் வாங்கல்களினால் உள்நாட்டுத் திரவத்தன்மை குறைவுற வேண்டி நேர்ந்தது. ஆனால் இதை மேலதிகமாக ஈடுசெய்து அரசாங்கத்தினதும் வங்கித்தொழில் முறையினதும் திரவத்தன்மை அதிகரித்தது. இம்மாற்றங்களின் போக்கு 1962ம் ஆண்டிலுள்ளதைப் போலவே அமைந்தது ஆயினும், தொகையளவில் உள்ள தொடர்புகள் குறிப்பிடத்தக்க அளவு வித்தியாசமாகக் காணப் பட்டன. அந்நிய திரவத்தன்மைக் குறைவோடு சேர்ந்து உண்டாகிய உள் நாட்டுத் திரவத்தன்மைக் குறைவும், நாணய விரிவினால் ஏற்பட்ட திரவத் தன்மை உயர்ச்சியும், 1962ம் ஆண்டிலுள்ளதைவிட மிகக் குறைவுற்ற தாயினும், வங்கித் தொழில்முறையினால் உள்நாட்டுத் தனிப்பட்டோர் துறைக்காக* ஏற்பட்ட கொடுகடன் ஆக்கம் மிகவும் அதிகமானதாக அமைந் தது. முந்திய வருடத்திலிருந்ததைவிட, 1963ம் ஆண்டில், உள்நாட்டுத் திரவத்தன்மையினது மொத்த நிகர அளவு, பன்மடங்கு அதிகமானதாகும். 1963ம் ஆண்டை, ''விரைவாக அதிகரிக்கும் உள்நாட்டுத் திரவத்தன்மை யோடு கூடிய ஆண்டு'', என அநேகமாகக் கூறலாம்.

இச்சந்தர்ப்பத்தில் மகாவங்கியின் கடன் கொள்கையானது, எதிர் பார்க்கக்கூடியதும் முக்கியமற்றதுமான தேவைகளுக்குக் கடன் அநாவசிய மாக விரிவடைதலைத் தடுத்தலும், கடன் விரிவடைதலைக்கட்டுப்படுத்தி

---

கவனிப்பு: உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் மொத்தத்தேசிய உற்பத்தி எண்தொகைகள் திருத் தங்களுக்கு உட்பட்டவை.

1. இங்குள்ள பாகுபாடு பணநிரம்பலில் (பணமும், கேள்விவைப்புக்களும்) மட்டுமல்லாது திரவ இருப்புச்சொத்துக்கள் யாவற்றிலும் உள்ள மாற்றங்களைக் கூறுகிறது. வரைவிலக்கணத்தின் படி ''பணம்'' என்பது ஏனைய இருப்புச்சொத்துக்கள் யாவற்றையும்விட அதிக திரவத் தன்மை பொருந்தியதெனினும், சேமிப்புக்களும், நிலையான வைப்புக்களும் கூட விரைவில் ஒரு பணக்குறைவுமின்றி காசாக மாற்றப்படலாம். ஆகவே அவை அநேகமாகப் பணத்தைப் போலவே திரவத்தன்மையோடு கூடியவை. ஆயினும் ''பணத்தோடு நெருங்கிய சம்பந்த முடைய''தெனப்பட்ட வேறு பலவாக உள்ள, அரசாங்கத்திடமிருந்தும் நிதித்தாபனங் களிடமிருந்தும் கேட்கப்படும் உரிமைக்கோரிக்கைகள் இருக்கின்றன. இவை பிரயாணிகள் காசோலைகளும், வர்த்தக உண்டியல்களும், இறைசேரி உண்டியல்களும், பலதிறப்பட்ட மீட்கப்படக்கூடிய பிணைகளும், விலைப்படுத்தப்படக்கூடிய பிணைகளும்—(இவற்றுள் பெரும் பான்மையான பகுதி அதிகமாக அரசாங்கப் பிணைகளே) ஆகும். அரசாங்கப்பிணைகளினது திரவத்தன்மை, அவற்றினது தவணையிலும் முதிர்ச்சியிலும், மகாவங்கியின் கொள்கையிலும், பிணைச்-சந்தையில் நிலவக்கூடிய ஒழுங்கின்தன்மையிலும் தங்கியிருக்கிறது. பொதுவாக அரசாங்கப்பிணைகள் வளர்ச்சிகுன்றிய சந்தைகளிருப்பதைவிட முன்னேற்றமடைந்த பிணைச் சந்தைகளில் அதிக திரவத்தன்மை பொருந்தியனவாக உள்ளன.

ராட்கிளிவ் குழுவின் கீட்காணும் மேற்கோள் இது சம்பந்தமாக முக்கியமுடையதாக விளங்கு கிறது—''நாங்கள் பணநிரம்பலின் அளவை முக்கியமற்றதாகக் கருதாவிடினும், பொரு ளாதாரத்தில் அதை திரவத்தன்மையின் அகன்ற அமைப்பின் ஒரு பகுதியாகவே காண்கி றோம். செலவழித்தற்கான தீர்மானங்களிலே முழுத்திரவத்தன்மையின் நிலைமையே கவனிக் கத்தக்கது. முழுத்திரவத்தன்மையின் அமைப்பில் பணநிரம்பலுக்குள்ள முக்கியத்துவத்திற் காகவே எங்கள் அக்கறை பணநிரம்பலில் உள்ளது''. (நாணய முறைமையின் தொழிற் பாடுகள் பற்றிக் குழுவின் அறிக்கை, 1959பக்: 132, பந்தி 389).

*இங்கு பாவிக்கப்படும் ''தனிப்பட்டோர்துறை'' என்னும் பொருள் அரசாங்கக் கூட்டுத் தாபனங்களையும், உள்ளூர் அதிகார நிலையங்களையும், பலவிதமான அரசாங்க ஆதிக்கமுள்ள நிலையங்களையும், அரசாங்கம் ஊக்குவிக்கும் நிலையங்களையும், முகவர் நிலையங்களையும்— உண்மையில் மத்திய அரசாங்கம், வர்த்தக வங்கிகள், மகாவங்கி தவிர்ந்த எல்லாத் தாபனங் களையும் உட்படுத்தும்.

1963ம் ஆண்டில் நிகழ்ந்த திரவ இருப்புச் சொத்துக்களினது மொத்தத் தொகுதியின் உயர்ச்சியானது, பிரதானமாகப் பொதுமக்கள் கைவசமுள்ள காசு, வர்த்தக வங்கிகள் வசமுள்ள இருப்புச்சொத்துக்கள், அரசாங்கப் பிணைகளின் இருப்புச் சொத்துக்கள் முதலியவைகளின் உயர்ச்சியாக வடிவ மெடுத்தது. 1962ம் ஆண்டிலிருந்த ரூபா 204 இலட்சங்கள் கொண்ட அல்லது 2.9 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில், நாணயத்தாள்களும் குத்திகளும் ரூபா 1158 இலட்சங்களாக அல்லது 16.2 சதவீதமாக உயர்ந் தன. சென்ற வருடத்திலிருந்த ரூபா 336 இலட்சங்கள் கொண்ட அல்லது 5.6 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில், வர்த்தக வங்கிகளிடமிருந்த கேள்விவைப்புக்கள் ரூபா 477 இலட்சங்களாக அல்லது 7.6 சதவீதமாக உயர்ந்தன. முழுப்பணநிரம்பலானது, 1962ம் ஆண்டிலிருந்த ரூபா 540 இலட்சங்கள் கொண்ட அல்லது 4.2 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில், ரூபா 1633 இலட்சங்களாக அல்லது 12.2 சதவீதமாக உயர்ந்தது. வர்த்தக

அதை உண்மையான பொருளாதார அபிவிருத்தித் தேவைகளுக்குச் செலுத்துதலும், அத்துடன் கடன்நிலையங்களின் அமைப்பைப் புதிய பிரதேசங்களுக்கும் வட்டாரங்களுக்கும் விரிவடையச்செய்தலுமாகும். பொருளாதாரத்திலுள்ள தனிப்பட்டோர்துறையிலும், மற்றும் பலதிறப்பட்ட வீக்க அமுக்கங்களிலுமுள்ள விரிவடைந்து கொண்டுவரும் திரவத்தன்மையின் மொத்த மட்டமானது, பொதுவாக மிகவும் அவதானமாக இருக்க வேண்டிய தேவையையும், மற்றும் பொருளாதாரத்தின் குறிப்பிட்ட சில துறைகளின் கடன் தேவைகளை மதிப்பிடுவதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய அவசியத்தையும் மீள வலியுறுத்துகிறது. வருடமுழுமையும் கடன் தடுப்பானது, 1963ம் ஆண்டுக்கு முன்னர் புகுத்தப்பட்ட தெரிவு செய்யப்பட்ட கட்டுப்பாடுகள் மூலமாகவும், ஒழுக்க முறையாகவும், கூடிய அவதானத்துடன் தொடர்ந்து இயக்கப்பட்டது. பொதுவாகக் கடன் விரிவடைதலைத் தடுத்தற்குரிய அவசியத்தை அறிந்திருந்தாலும், மகாவங்கியானது, பொருளாதாரத்தின் குறிப்பிட்ட சில துறைகளிற் தோன்றிக் கொண்டிருக்கும் வளர்ச்சிக்கான தூண்டுதல்களுக்குக் கடன் வழங்கப்படுதலைத் தடுக்க விரும்பவில்லை.

### 1. உள்நாட்டுத் திரவத்தன்மையின் வளர்ச்சி

மேலே காட்டப்பட்ட பலதிறப்பட்ட காரணங்களினதும் செல்வாக்கினுல், வங்கிகளல்லாத தனிப்பட்டோர்துறைவசமிருந்த திரவ இருப்புச் சொத்துக்களின் மொத்தத் தொகுதி, 1962ம் ஆண்டு[1] ஏற்பட்ட ரூபா 1460 இலட்சங்கள் கொண்ட அல்லது ஏறக்குறைய 5.8· சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டு ரூபா 2870 இலட்சங்களாக அல்லது 11 சதவீதமாக உயர்ந்தது. தனியாளுக்கிருக்கக்கூடிய திரவ இருப்புச் சொத்துக்களும், 1962ம் ஆண்டில் இருந்த ரூபா 253.9லிருந்து, 1963ம் ஆண்டில் ரூபா 274.3 ஆக, 8.0 சதவீத உயர்ச்சியைக் (1962ல் இருந்த, ஆக 3.0 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில்) காட்டியது. இலங்கையின் தேசிய வருமானம் வருடப்போக்கிற் பெயரளவில் ஏறக்குறைய 4.8 சதவீதம் உயர்ந்திருப்பதாக (உண்மை நியதியின்படி ஏறக்குறைய 1.8 சதவீதம்) மதிப்பிடப்பட்டிருப்பதால், அட்டவணை II உ-1ற் காட்டப்பட்டுள்ளபடி, நாட்டின் அடிப்படைத் திரவத்தன்மை விகிதம் முக்கியமாகக் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்திருக்கிறது.

---

1. மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்களினது வரையறையிலிருந்து அரசாங்கப் பிணைகளை நீக்கிவிட்டால், 1962ம் ஆண்டில் இருந்த ரூபா 1134 இலட்சங்கள் கொண்ட அல்லது 5·3 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில் ஏற்பட்ட உயர்ச்சி, ரூபா 2325 இலட்சங்கள் அல்லது 10·3 சதவீதமாகும். மறுபக்கமாக நோக்கின், அதாவது விசேட அரசாங்க நிதிமுகவர் நிலையங்கள் வசமுள்ள அரசாங்கப் பிணைகளையும்—தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி, இலங்கைச் சேமிப்பு வங்கி ஊழியர் சேமநிதி முதலியவற்றையும்—உட்படுத்தினுல், 1962ம் ஆண்டில் இருந்த ரூபா 2127 இலட்சங்கள் கொண்ட அல்லது 6·6 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில் ஏற்பட்ட உயர்ச்சி, ரூபா 4088 இலட்சங்கள் அல்லது 12·0 சதவதமாகும்.

## அட்டவணை II உ-1

## வங்கிகளல்லாத தனிப்பட்டோர் துறையின் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள் 1961-1963

| விவரணம் | தொகை (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | மொ.தே.உ. சதவீதத்தின் படி (அ) | | |
|---|---|---|---|---|---|---|
| | 1961 | 1962 | 1963 | 1961 | 1962 | 1963 |
| 1. பிரதான திரவ இருப்புச் சொத்துக்கள் | | | | | | |
| (அ) நாணயத்தாள்களும் குத்திகளும் .. | 692·2 | 712·6 | 828·4 | 11·3 | 11·1 | 12·3 |
| (ஆ) கேள்வி வைப்புக்கள் .. | 596·4 | 630·0 | 677·7 | 9·7 | 9·8 | 10·1 |
| மொத்தம் | 1288·6 | 1342·7 | 1506·0 | 21·0 | 20·9 | 22·4 |
| மாற்றம்—சதவீதப்படி .. | | +4·2 | +12·2 | | | |
| 2. ஏனைய திரவ இருப்புச் சொத்துக்கள் .. | | | | | | |
| (அ) வர்த்தக வங்கிகளிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் .. .. | 130·6 | 140·9 | 165·2 | 2·1 | 2·2 | 2·5 |
| (ஆ) தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் .. | 351·9 | 362·3 | 368·5* | 5·7 | 5·6 | 5·5 |
| (இ) இலங்கைச் சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் .. | 75·3 | 75·4 | 75·1* | 1·2 | 1·2 | 1·1 |
| (ஈ) வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை வைப்புக்கள் .. | 223·8 | 263·7 | 302·8 | 3·6 | 4·1 | 4·5 |
| (உ) குடியிருப்போரின் அந்நிய மிச்சங்கள் | 19·6 | 21·0 | 13·6* | 0·3 | 0·3 | 0·2* |
| (ஊ) சேமிப்புப் பத்திரங்கள் .. | 32·7 | 32·9 | 34·4 | 0·5 | 0·5 | 0·5 |
| (எ) இறைசேரி உண்டியல்கள் .. | 5·8 | 2·8 | 0·5 | 0·1 | ... | ... |
| (ஏ) வரி ஒதுக்குநிதிப் பத்திரங்கள் .. | 17·1 | 17·2 | 25·3 | 0·3 | 0·3 | 0·4 |
| (ஐ) அரசாங்கப் பிணைகள் .. | 359·6 | 392·5 | 446·6 | 5·9 | 6·1 | 6·6 |
| மொத்தம் | 1216·4 | 1308·7 | 1432·0* | 19·8 | 20·4 | 21·3 |
| மாற்றம்—சதவீதப்படி .. | | +7·6 | + 9·4 | | | |
| 3. தனிப்பட்டோர் துறையின் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள் .. | | 2651·4 | 2938·0* | 40·8 | 41·3 | 43·7 |
| மாற்றம்—சதவீதப்படி .. | 2505·0 | +5·8 | +10·8 | | | |
| தபாற்கந்தோர் சேமிப்புவங்கி, இலங்கை சேமிப்புவங்கி, ஊழியர் சேமநிதி போன்ற அரசாங்க நிதித்தாபனங்கள் வசமுள்ள அரசாங்கப் பிணைகளும் இறைசேரி உண்டியல்களும் மேலே சேர்க்கப்படவில்லை .. | 698·0 | 764·4 | 886·6 | 11·4 | 11·9 | 13·2 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*மதிப்பீடுகளின்படி

(அ) நடைமுறைச் சினைக்கொள் விலைகளின்படி

1963ம் ஆண்டில் நிகழ்ந்த திரவ இருப்புச் சொத்துக்களினது மொத்தத் தொகுதியின் உயர்ச்சியானது, பிரதானமாகப் பொதுமக்கள் கைவசமுள்ள காசு, வர்த்தக வங்கிகள் வசமுள்ள இருப்புச்சொத்துக்கள், அரசாங்கப் பிணைகளின் இருப்புச் சொத்துக்கள் முதலியவைகளின் உயர்ச்சியாக வடிவமெடுத்தது. 1962ம் ஆண்டிலிருந்த ரூபா 204 இலட்சங்கள் கொண்ட அல்லது 2.9 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில், நாணயத்தாள்களும் குத்திகளும் ரூபா 1158 இலட்சங்களாக அல்லது 16.2 சதவீதமாக உயர்ந்தன. சென்ற வருடத்திலிருந்த ரூபா 336 இலட்சங்கள் கொண்ட அல்லது 5.6 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில், வர்த்தக வங்கிகளிடமிருந்த கேள்விவைப்புக்கள் ரூபா 477 இலட்சங்களாக அல்லது 7.6 சதவீதமாக உயர்ந்தன. முழுப்பணநிரம்பலானது, 1962ம் ஆண்டிலிருந்த ரூபா 540 இலட்சங்கள் கொண்ட அல்லது 4.2 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில், ரூபா 1633 இலட்சங்களாக அல்லது 12.2 சதவீதமாக உயர்ந்தது. வர்த்தக

வங்கிகளிடமிருந்த தவணை வைப்புக்களும், சேமிப்பு வைப்புக்களும் ரூபா 634 இலட்சங்களால் அல்லது 15.7 சதவீதத்தால் அதிகரித்தன—இவற்றிற்குத் தொடர்பான, 1962ம் ஆண்டிலிருந்த அதிகரிப்பு, ரூபா 502 இலட்சங்கள் அல்லது 14.2 சதவீதமாகும். தனிப்பட்டோர்துறையிலுள்ள அரசாங்கப் பிணைகள், 1962ம் ஆண்டிலிருந்த ரூபா 329 இலட்சங்கள் கொண்ட அல்லது 9.1 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில், ரூபா 541 இலட்சங்களாக அல்லது 13.8 சதவீதமாக, உயர்ச்சியுற்றன.

1963ம் ஆண்டில் திரவ இருப்புச்சொத்துக்களினதும், முக்கியம் வாய்ந்த திரவத்தன்மை விகிதங்களினதும் வளர்ச்சி, மேலே காட்டப் பட்டுள்ளபடி இவ்விருப்புச் சொத்துக்களின் அமைப்பில் ஒரு மாற்றத்துட னும் சேர்ந்து வந்தது. நிலையான வைப்புக்களிலும் சேமிப்புவைப்புக்களிலும், அத்துடன் அரசாங்கப்பிணைகளிலும் உயர்ச்சி ஏற்பட்டிருந்தும், இரண்டாந் தானம் வகிக்கும் திரவப்பொருளிலிருந்து பிரதானமான திரவப்பொருளுக்கு ஒரு முக்கியமான முறைமாற்றம், ஏற்பட்டது. திரவ இருப்புச் சொத்துக் களின் மொத்தத் தொகுதிக்குப் பணநிரம்பலின் விகிதம், 1962ல் 50.6 சத வீதமாக இருந்து, 1963ம் ஆண்டில் 51.3 சதவீதம் உயர்ந்தது. மொத்தப் பணநிரம்பலுக்குத் தனிப்பட்டோர்துறையின் நாணய இருப்புச் சொத்துக் களின் விகிதம் 53.1 சதவீதத்திலிருந்து 55.0 சதவீதம் உயர்ந்தது. சுருங்கக் கூறின், 1963ம் ஆண்டிலுள்ள உள்நாட்டுத் திரவத்தன்மையின் மாற்றம், தொகை, தன்மை இரண்டினுமாகும்.

கிடைத்திருக்கும் செய்தியை அடிப்படையாகக்கொண்டு, தனிப்பட் டோர் துறையிலுள்ள வேறுபட்ட பொருளாதார வகுப்பினருக்கு 1963ம் ஆண்டினது திரவ இருப்புச்சொத்துக்களின் மொத்த உயர்ச்சி எவ்வாறு விநியோகிக்கப்பட்டது என்பதைக் காட்டுவது இயலாததாயுள்ளது. அட்ட வணை II உ-1ற் காட்டப்பட்டுள்ளதான, அரசாங்கப்பிணைகளில் 1963ம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 541 இலட்சங்கள் கொண்ட உயர்ச்சி, நம்பிக்கைப் பொறுப்புக்கள் சகாயநிதி, உபகாரநிதி, சேமநிதி[1] (ரூபா 294 இலட்சங்கள்) காப்புறுதித்துறை (ரூபா 220 இலட்சங்கள்) தனியாட்கள் (ரூபா 10 இலட் சங்கள்), ஆகிய பகுதிகளின் விரிவை, அநேகமாக மிகவும் பூரணமாகப் பிரதிபலிக்கின்றது. 1962ம் ஆண்டிற்கும், 1963ம் ஆண்டிற்குமான அளவை விபரங்கள் தெரிவிப்பதன்படி, வர்த்தக வங்கிகளினது வைப்புச்சொத்துக் கள் நிலை, கீழ்க்காணும் அட்டவணை II உ2-ல் விளக்கப்பட்டிருக்கிறது.

### அட்டவணை II உ-2

**பொருளாதார வகுப்பினருக்கு ஏற்பப் பகுக்கப்பட்ட, வர்த்தக வங்கிகளிடமுள்ள தனிப்பட்டோர் துறையின் மொத்த இருப்புச் சொத்துக்களின் மாற்றம்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1962 | 1963 | மொத்தம் |
|---|---|---|---|
| 1. வங்கிகளல்லாத நிதித் தாபனங்கள் | +10·5 | — 5·0 | + 5·5 |
| 2. தோட்டங்கள் .. .. | —14·6 | —18·8 | — 33·4 |
| 3. வர்த்தக நிலையங்கள் .. .. | +26·7 | +65·0 | + 91·7 |
| 4. ஏனைய தொழில்கள் .. .. | +41·2 | —14·0 | + 27·2 |
| 5. உள்ளூர் அதிகாரங்கள் .. | —10·4 | +16·6 | + 6·2 |
| 6. தொழில்கள் தவிர்ந்த நிலையங்கள் | +10·8 | +31·9 | + 42·7 |
| 7. தனியாட்கள் .. .. | +25·7 | +36·7 | + 62·4 |
| மொத்த மாற்றம் .. .. | +89·8 | +112·5 | +202·3 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

1. ஊழியர் சேமநிதியைத் தவிர்த்து.

1. (அ) பணநிரம்பல்

1962ம் ஆண்டின் ரூபா 540 இலட்சங்கள் கொண்ட அல்லது 4.2 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில் பணநிரம்பலானது ரூபா 1,3427 இலட்சங்களிலிருந்து ரூபா 1,5060 இலட்சங்களுக்கு, ரூபா 1633 இலட்சங்களால் அல்லது 12.2 சதவீதத்தால் உயர்ந்தது. சென்ற ஆண்டின் ரூபா 45 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில் பணநிரம்பலினது மாதாந்த உயர்ச்சி விகிதம் சராசரியாக ரூபா 136 இலட்சங்களாகும். அட்டவணை II உ-1ற் காட்டப்பட்டுள்ளபடி, 1963ம் ஆண்டில் ஏற்பட்ட மொத்த உள்நாட்டுத் திரவத்தன்மையின் வளர்ச்சியினது மிக முக்கியமான அம்சம் யாதெனில், தனிப்பட்டோர் துறைக்குச் சேர்வதாகிய இருப்புச் சொத்துக்களின் மொத்த உயர்ச்சியில் 57 சதவீதத்திற்கு வழிகாட்டுவதாகிய, பணநிரம்பலின் விரிவாகும். இதற்கு மாறாக 1962ம் ஆண்டில் உள்நாட்டுத் திரவத்தன்மையின் வளர்ச்சி மிகச்சிறிய அளவில் இருந்தபோது, பணநிரம்பலின் உயர்ச்சி, மொத்தத் திரவத்தன்மையின் உயர்ச்சியில் ஆக 37 சதவீதத்திற்கே வழிகாட்டியது. மேலும் 1963ம் ஆண்டில், பணநிரம்பலின் மொத்த உயர்ச்சியாகிய ரூபா 1633 இலட்சங்களில் 71 சதவீதம் நாணயத்தாள்களினதும் குத்திகளினதும் விரிவைக் கொண்டிருந்தது. ஆனல் 1962ம் ஆண்டிலிருந்த நாணயச் சேர்க்கையின் உயர்ச்சி, பணத்தொகையின் மொத்த உயர்ச்சியில் ஆக 38 சதவீதத்திற்கே வழிகாட்டியது. மொத்தப் பணத்திற்கு நாணயத்தின் விகிதம் 1962ம் ஆண்டிலிருந்த 53.1 சதவீதத்திலிருந்து 1963ம் ஆண்டில் 55.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

### அட்டவணை II உ-3

### பண நிரம்பலின் கூறுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | பொதுமக்களிடம் உள்ள நாணயம் | | பொதுமக்களிடமுள்ள கேள்வி வைப்புக்கள் | | மொத்தப் பணநிரம்பல் |
|---|---|---|---|---|---|
| | தொகை | மொத்தப் பண நிரம்பலின் சதவீதமாக | தொகை | மொத்தப் பணநிரம்பலின் சதவீதமாக | |
| 1953 .. .. | 335·3 | 40·6 | 491·5 | 59·4 | 826·8 |
| 1954 .. .. | 341·8 | 35·7 | 615·3 | 64·3 | 957·1 |
| 1955 .. .. | 384·5 | 35·8 | 688·4 | 64·2 | 1,072·9 |
| 1956 .. .. | 401·1 | 35·6 | 725·7 | 64·4 | 1,126·8 |
| 1957 .. .. | 434·9 | 41·8 | 605·2 | 58·2 | 1,040·1 |
| 1958 .. .. | 529·8 | 49·2 | 546·9 | 50·8 | 1,076·8 |
| 1959 .. .. | 565·0 | 48·0 | 612·7 | 52·0 | 1,177·7 |
| 1960 .. .. | 595·3 | 49·2 | 613·6 | 50·8 | 1,208·9 |
| 1961 .. .. | 692·2 | 53·8 | 596·4 | 46·2 | 1,288·6 |
| 1962 .. .. | 712·6 | 53·1 | 630·0 | 46·9 | 1,342·7 |
| 1963 .. .. | 828·4 | 55·0 | 677·7 | 45·0 | 1,506·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

ஆகவே 1963ம் ஆண்டில், தனிப்பட்டோர்துறையின் கேள்வி வைப்புக்கள் (இவ்வைப்புக்கள் 1963ல் 7.6 சதவீதத்தால் உயர்ச்சியடைந்தன), நாணய இருப்புச்சொத்துக்கள் ஆகிய இரண்டினதும் விரிவு வீதம், பெயரளவு நியதிப்படியான மொத்தத் தேசிய உற்பத்தியின் உயர்ச்சி வீதத்தைக் காட்டிலும், கணிசமாகக் கூடியதாகும். பதுக்குவதில் உண்டான விருப்பம் ஒரு முக்கியமான அளவிற்கு 1963ம் ஆண்டில் நாணயத்திற்கு

ஏற்பட்ட அதிகரிப்பான கேள்வியோடு கூடியது என்ற கருத்து, பணக் கூறுகளின் விரிவு பற்றிய ஆராய்ச்சியிலும் குறிப்பிடப்பட்டது. ரூபா 100, ரூபா 50 ஆகிய இனத்தாள்களின் தொகை, நாணயச்சுற்றோட்டத்தின் முழு அதிகரிப்பில் 78.0 சதவீதத்திற்கு வழிகாட்டி, 1963ம் ஆண்டில் ரூபா 870 இலட்சத்தால் (அல்லது 20.5 சதவீதத்தால்) அதிகரித்தது. மேலும், அண்மை வருடங்களிலே மென்மேலும் உயர்ந்து கொண்டே செல்லும், மொத்த நாணயச் சுற்றோட்டத்திற்கு இவ்விருதரப்பட்ட தாள்களினதும் விகிதம், 1962ம் ஆண்டிலிருந்த 53.8 சதவீதத்திலிருந்து 1963ம் ஆண்டில் 56.8 சதவீதத்திற்குக் கூர்மையாக உயர்ச்சியுற்றது.

இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி, 1962ம் ஆண்டில் பெயரளவு நியதியின்படி 4.5 சதவீதமாகவும், உண்மை நியதியின்படி 3.7 சதவீதமாகவும் உயர்ந்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்வருடத்திற் பணநிரம்பலானது 4.2 சதவீதத்தால் விரிவடைந்தது. மறுபக்கத்தில், பணநிரம்பலானது 12.2 சதவீதத்திற்கு உயர்ந்திருக்கையில், 1963ம் ஆண்டில் தற்காலிக மொத்தத் தேசிய உற்பத்தி மதிப்பீடுகள், பெயரளவு நியதியின்படி 4.8 சதவீதமும், உண்மை நியதியின்படி 1.8 சதவீதமுமாகிய உயர்ச்சியை உணர்த்துகின்றன. நடைமுறைச்சின்னக் கொள்விலைப்படியான மொத்தத் தேசிய உற்பத்திக்குப் பணநிரம்பலினது விகிதம்—(கிடைத்தற்கான உள்நாட்டுத் திரவத்தன்மைக்கு இதுவே ஓரளவு அதிமுக்கியமான, ஒரேயொரு கருவியென எடுக்கலாம்)—1962ம் ஆண்டிலிருந்த 21.0 சதவீதத்திலிருந்து 1963ம் ஆண்டில் 22.4 சதவீதத்திற்கு உயர்ந்தது. தனியாளுக்கான பணநிரம்பல், ரூபா 128.6லிருந்து ரூபா 140.6க்கு 9.3 சதவீதத்தால் உயர்ந்தது.

பணநிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்களைப் பாகுபடுத்தும் காரணத்திற்காகப் பொதுமக்களின் மொத்த கொடுக்கல் வாங்கல்களை மூன்று அகன்ற பகுதிகளின் கீழ்ச் சுலபமாகத் தொகுக்கலாம்—அவையாவன, (1) மகாவங்கி வர்த்தகவங்கிகள் இரண்டும் உட்பட, நிகர வெளிநாட்டு வங்கி இருப்புச்சொத்துக்களின் மாற்றத்தால் அண்ணளவாகக் குறிக்கப்பட்டுள்ளபடி, வெளியுலகத்துடன் கொண்ட நிகர கொடுக்கல் வாங்கல்கள். (2) வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை, சேமிப்புவைப்புக்கள் தொகுதியின் மாற்றங்களுக்கு மாற்றியமைக்கப்பட்ட, வங்கிகள், தனிப்பட்டோர்துறை முகமுகமாய் உண்டாய கொடுகடன் தொகையிற் பிரதிபலிக்கப்பட்டுள்ளபடி, உள்நாட்டு வர்த்தகவங்கித் தொழிற்துறையினது நிகர கொடுக்கல் வாங்கல்கள். (3) மகாவங்கியினதும் வர்த்தக வங்கிகளினதும் அரசாங்கத்துக்கான கொடுகடன் விரிவடைதல் அல்லது சுருங்குதலாற் பிரதிபலிக்கப்பட்டதும், அரசாங்க ரூபா மீதிகளின் மாற்றங்களுக்கு மாற்றியமைக்கப்பட்டதுமான அரசாங்கத்தினது உள்நாட்டு நிகர கொடுக்கல் வாங்கல்கள். இதற்கு முன்னர், வங்கிகள் தனிப்பட்டோர்துறையிடமிருந்து பிணைகளை வாங்கியோ விற்றோ இருக்கும்வரை, வங்கித்தொழிற் பகுதிகளினது அரசாங்கப்பத்திரத்தின் நிகரமாற்றம் அரசாங்கத்திற்கான வங்கிக்கொடுகடனின் மாற்றத்தைக் கட்டாயமாகக் காட்டும் என்று பாவிப்பது, சரியற்றதாக இருந்தது. ஆனால் பெரும்பான்மையாக நோக்குமிடத்து, 1963ம் ஆண்டில் தொகையளவில் முக்கியமுள்ளதாகக் கொள்ளக்கூடிய மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்கள் இல்லாதபடியால், முதற் கூறப்பட்ட எதிர்பார்க்கக்கூடிய காரணத்தைக் கவனியாதுவிடலாம். அட்டவணை II உ-4ல் அத்தன்மையான பாகுபாடு, 1958ம் ஆண்டு தொடக்கம் 1963ம் ஆண்டு வரையுள்ள ஒவ்வொரு வருடத்திற்குமாகக், கொடுக்கப்பட்டிருக்கிறது. 1963ம் ஆண்டிற் தனிப்பட்டோர்துறையினது பணநிரம்பலின்மேலுள்ள வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களினதும், அரசாங்கத்தொழிற்பாடுகளினதும், வர்த்தக வங்கித் தொழிற் கொடுக்கல் வாங்கல்களினதும் செல்வாக்கு பெரும்பாலும் சென்ற

ஆண்டிலிருந்த அதே திசையிலேயே இருந்தது. ஆனால் இருக்கக்கூடிய தொகைகள் கவனிக்கத்தக்க அளவு வித்தியாசப்பட்டன. வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்பட்ட நாணய இருப்புச்சொத்துக்களின் அளவானது, 1962ம் ஆண்டில் இருந்த ரூபா 911 இலட்சங்களுடன் (1961ல் ரூபா 786 இலட்சங்கள்) ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில் ஆக ரூபா 532 இலட்சங்களாக இருந்தது—1963ம் ஆண்டில் வங்கி இருப்புச் சொத்துக் களின் குறைந்த விகித வீழ்ச்சி, இறக்குமதி மட்டுப்படுத்துதல் நடைமுறை யில் இருந்ததைப் பெரும்பாலும் பிரதிபலிக்கிறது. பணநிரம்பலின் மேல், விரிவடையும் அரசாங்கக் குறையினது மோதுகை 1963ம் ஆண்டிற் குறைந்த தாகும். 1962ம் ஆண்டிலிருந்த ரூபா 1741 இலட்சங்களுடன் (1961ல் ரூபா 1735 இலட்சங்கள்) ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில் இது ரூபா 1328 இலட்சங்களாகும். மறுபுறம், தனிப்பட்டோர்துறைக்கான வர்த்தக வங்கி களின் கொடுகடனானது, 1962ம் ஆண்டிலிருந்த ரூபா 422 இலட்சங்களுடன் (1961ல் ரூபா 125 இலட்சங்கள்) ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில் முக்கிய மாக இலங்கை வங்கிகள் சார்பிற் கூர்மையாக விரிவடைந்தது. ஆனால் வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை சேமிப்பு வைப்புக்கள், பிரதான திரவத் தன்மையினது (பணநிரம்பல்) விரிவை, 1962ம் ஆண்டிலிருந்த தொகை யான ரூபா 626 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டினது தொகையாகிய ரூபா 634 இலட்சங்களால், ஈடுசெய்தன. (1961ம் ஆண்டில் இவ்வைப்புக்கள் ரூபா 84 இலட்சங்களால் வீழ்ந்தன). ஆகவே 1963ம் ஆண்டில், தாழ்வுறும் வெளிநாட்டுத் திரவத்தன்மையினாலும், உயர்ந்து வரும் தவணை, சேமிப்பு வைப்புக்களினது மட்டத்தாலும், உள்நாட்டு நாணயத்தின் மேல் ஏற்பட்ட சுருங்குதலாகிய மோதுகை, அரசாங்கத்தின் குறைச் செலவாலும், வர்த்தக வங்கிக் கொடுகடன் உண்டாக்குதலினாலும் பிறப்பாகி ஒன்று சேர்ந்து வரும் விரிவடைதலை ஈடுசெய்யப் போதாமற் போய்விட்டது. இதன் விளைவாகப் பணநிரம்பலானது ரூபா 1633 இலட்சங் களால் அதிகரித்தது.

1962ம் ஆண்டிற்குக் குறிப்பிடத்தக்க அளவு முரணாகப் பணநிரம் பலானது, 1963ம் ஆண்டில், ஆடி, மார்கழி தவிர்ந்த ஒவ்வொரு மாதங் களின் போதும் அதிகரித்தது. அட்டவணை II உ-4ற் கொடுக்கப்பட்ட தரவுக்கு, அட்டவணை II உ-6 பணத்தொகையின் கால்வருட மாற்றங் களைக் கொண்ட பாகுபாடுடன் குறைநிரப்பி, வருடத்தின் வெவ்வேறு கட்டங்களின்போது இதற்குத் தொடர்பான பிரதான மூலகாரணங்களின் முக்கியத்துவம் அகன்ற அளவில் வித்தியாசப்பட்டதைக் காட்டுகிறது.

வங்கிக்கொடுகடன் வீழ்ச்சியும், தவணைவைப்புக்கள் உயர்ச்சியும் முக்கிய சுருக்க விளைவுகளை உண்டாக்கிய வேளையில், பணநிரம்பலினது ரூபா 426 இலட்சங்கள் கொண்ட அதிகரிப்பானது முதன் மூன்று மாதங் களிலும் வெளிநாட்டு வங்கி இருப்புச் சொத்துக்களின் விரிவினால் அடக்கப் பட்டிருந்தது. இவ்வருடத்தின் இரண்டாங்காலின் போது, ரூபா 626 இலட் சங்கள் கொண்ட பணநிரம்பலின் அதிகரிப்பிற்குப் பின்னின்ற பிரதான மான காரணம், வங்கித்தொழிலினது விரிவாகும். இது, மேலும் சேர்ந்த வெளிநாட்டுத் திரவத்தன்மையினால் மீளவலியுறுத்தப்பட்டு, அரசாங்கத் துறையில் ஏற்பட்ட சுருக்கத்தினால் ஓரளவு ஈடுசெய்யப்பட்டது. மூன்றாம் காலில் நாணய விரிவு ஏனைய முக்கிய இயக்கங்களை வீழ்த்தியது. நாணய விரிவை ரூபா 514 இலட்சங்களுக்குக் குறைத்த முக்கிய காரணியாவது வெளிநாட்டுத் திரவத்தன்மையினது பெரிய நட்டமாகும். கடைசிக்காலில் வெளிநாட்டு இருப்புச்சொத்துக்கள் மிகவும் சுருங்கியும், தவணை வைப்புக்

## அட்டவணை II உ-4

## பணநிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| பணநிரம்பலைப் பாதிக்கும் காரணிகள் | 1957/58 மார்கழி முடிவில் | | 1958/59 மார்கழி முடிவில் | | 1959/60 மார்கழி முடிவில் | | 1960/61 மார்கழி முடிவில் | | 1961/62 மார்கழி முடிவில் | | 1962/63 மார்கழி முடிவில் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் |
| 1. வர்த்தகவங்கிகளின் வெளியூர்ச் சொத்துக்கள் (நிகர) | — | 82·2 | — | 195·0 | — | 170·2 | — | 78·6 | — | 91·1 | — | 53·2 |
| 2. வர்த்தகவங்கிகளின் தொழிற்பாடுகள் .. .. | | | | | | | | | | | | |
| (அ) தனிப்பட்டோர் துறைக்குக் கொடுகடன் .. | 53·4 | — | 9·7 | — | 31·5 | — | 12·5 | — | 42·2 | — | 124·2 | — |
| (ஆ) இறைசேரி உண்டியல்கள், அரசாங்கப்பிணைகள், அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ஆகிய உடமைகள் .. | — | 39·6 | 30·2 | — | 6·0 | — | 21·4 | — | 71·3 | — | — | 5·4 |
| (இ) தவணைவைப்புக்களும் சேமிப்புவைப்புக்களும் .. | — | 38·5 | — | 34·8 | — | 52·8 | 8·4 | — | — | 62·6 | — | 63·4 |
| (ஈ) வர்த்தகவங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (நிகர) .. | — | 29·6 | 11·6 | — | — | 19·7 | — | 28·0 | 11·7 | — | 33·9 | — |
| 3. மகாவங்கியின் தொழிற்பாடுகள் .. .. .. | | | | | | | | | | | | |
| (அ) அரசாங்கத்திற்கு முற்பணங்கள் .. .. | 75·0 | — | 61·8 | — | 21·9 | — | 1·9 | — | 3·0 | — | 7·0 | — |
| (ஆ) இறைசேரி உண்டியல்கள், அரசாங்கப் பிணைகள், அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ஆகிய உடமைகள் .. | 100·6 | — | 191·0 | — | 224·3 | — | 140·8 | — | 175·9 | — | 139·5 | — |
| (இ) ஏனைய இருப்புச்சொத்துக்களும், கணக்குகளும் (நிகர) | 24·5 | — | — | 27·9 | — | 19·3 | — | 9·1 | — | 18·6 | — | 10·7 |
| 4. அரசாங்கப் பணமிச்சங்கள் .. .. .. | — | 36·4 | 64·0 | — | 8·0 | — | 9·4 | — | — | 76·1 | — | 8·3 |
| 5. சீராக்கங்கள் .. .. .. | 9·6 | — | — | 9·6 | 1·4 | — | 1·0 | — | — | 1·7 | — | 0·2 |
| மொத்த விரிவு/சுருக்கக்காரணிகள் .. .. .. | 263·1 | 226·3 | 368·3 | 267·3 | 293·1 | 262·0 | 195·4 | 115·7 | 304·1 | 250·1 | 304·6 | 141·2 |
| பணநிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்கள் .. .. | +36·6 | | +101·0 | | +31·1 | | +79·8 | | +54·0 | | +163·3 | |

மூலம்: இலங்கை மகா வங்கி.

## அட்டவணை II உ-5

### பண நிரம்பல்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலமுடிவில் | 1958 | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | சதவீத மாற்றம் 1958 ல் இருந்து 1959 | சதவீத மாற்றம் 1959 ல் இருந்து 1960 | சதவீத மாற்றம் 1960 ல் இருந்து 1961 | சதவீத மாற்றம் 1961 ல் இருந்து 1962 | சதவீத மாற்றம் 1962 ல் இருந்து 1963 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தை .. .. | 1,014 | 1,050 | 1,180 | 1,207 | 1,426 | 1,347 | + 3·6 | +12·4 | + 2·3 | +18·1 | − 5·5 |
| மாசி .. .. | 1,016 | 1,053 | 1,192 | 1,193 | 1,561 | 1,369 | + 3·6 | +13·2 | + 0·1 | +30·8 | −12·3 |
| பங்குனி .. | 1,023 | 1,089 | 1,194 | 1,210 | 1,635 | 1,385 | + 6·5 | + 9·6 | + 1·3 | +35·1 | −15·6 |
| சித்திரை .. | 1,032 | 1,084 | 1,165 | 1,306 | 1,448 | 1,400 | + 5·0 | + 7·5 | +12·1 | +10·9 | − 3·3 |
| வைகாசி .. | 1,000 | 1,096 | 1,163 | 1,219 | 1,317 | 1,431 | + 9·6 | + 6·1 | + 4·8 | + 8·0 | + 8·6 |
| ஆனி .. .. | 1,015 | 1,094 | 1,170 | 1,221 | 1,298 | 1,448 | + 7·9 | + 6·9 | + 4·4 | + 6·3 | +11·5 |
| ஆடி .. .. | 1,023 | 1,094 | 1,150 | 1,223 | 1,277 | 1,447 | + 6·9 | + 5·1 | + 6·3 | + 4·4 | +13·3 |
| ஆவணி .. | 1,022 | 1,095 | 1,161 | 1,231 | 1,270 | 1,474 | + 7·1 | + 6·0 | + 6·0 | + 3·2 | +16·1 |
| புரட்டாதி .. | 1,072 | 1,128 | 1,181 | 1,261 | 1,294 | 1,499 | + 5·2 | + 4·7 | + 6·8 | + 2·6 | +15·8 |
| ஐப்பசி .. | 1,085 | 1,153 | 1,212 | 1,248 | 1,317 | 1,505 | + 6·3 | + 5·1 | + 3·0 | + 5·5 | +14·3 |
| கார்த்திகை .. | 1,070 | 1,170 | 1,219 | 1,251 | 1,307 | 1,533 | + 9·3 | + 4·2 | + 2·6 | + 4·5 | +17·3 |
| மார்கழி .. | 1,077 | 1,178 | 1,209 | 1,289 | 1,343 | 1,506 | + 9·4 | + 2·6 | + 6·6 | + 4·2 | +12·2 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

அட்டவணை II உ-6

பணநிரம்பலினது கால்வருட மாற்றப் பாகுபாடு, 1963

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | முதலாம் கால் | இரண்டாம் கால் | மூன்றும் கால் | நான்காம் கால் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வெளிநாட்டுவங்கி இருப்புச் சொத்துக்கள் (நிகர) .. .. | +66·7 | +24·1 | − 51·2 | −92·9 | − 53·2 |
| அரசாங்கத் தொழிற்பாடுகள் .. | − 1·9 | −23·2 | +107·8 | +49·9 | +132·8 |
| வர்த்தக வங்கிக் கொடுகடன் .. | −12·9 | +54·1 | + 25·1 | +57·9 | +124·2 |
| தவணை, சேமிப்பு வைப்புக்கள் .. | −11·7 | − 1·2 | − 28·8 | −21·8 | − 63·4 |
| பணநிரம்பலினது மாற்றம் .. | +42·6 | +62·6 | + 51·4 | + 6·7 | +163·3 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

கள் சிறப்பாக உயர்ந்தும் இருந்தன. ஆனால் உள்நாட்டு நாணயநிலைமையின் மேல் அவற்றினது விளைவுகள், அரசாங்கத்தினதும், வங்கித்தொழிலினதும் விரிவினால், அநேகமாக இல்லாமற் செய்யப்பட்டன.

முதலாவது அரையாண்டில் விரிவடையக்கூடிய சக்தியாகவும், இரண்டாவது அரையாண்டில் சுருங்கும் செல்வாக்கைக் கொண்டதாகவும், வெளிநாட்டுத்துறையுடனுள்ள கொடுக்கல் வாங்கல்கள் தொழிற்பட்டன. முதலாவது அரையாண்டில் அரசாங்கத்துறை ஓரளவு சுருங்குதலான செல்வாக்கைக் கொண்டு வந்தது. ஆனால் பிற்பகுதியில், குறிப்பாக மூன்றும் காலில் அது பணம் உருவாக்கும் சக்தியுடன் எழுந்தது. ஏறக்குறைய முழுவருடமும் தவணை, சேமிப்பு வைப்புக்களினது வளர்ச்சி பிரதான திரவத்தன்மையினது விரிவைத் தொடர்ந்து தடைசெய்கையில், வங்கிக்கொடுகடன் சிறு தடைகளுக்கிடையே தொடர்ந்து வளர்ந்தது.

### 1. (ஆ) தவணைவைப்புக்களும், சேமிப்புவைப்புக்களும்

1962ம் ஆண்டிலுள்ள ரூபா 607 இலட்சங்கள் கொண்ட அல்லது 7.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், தனிப்பட்டோர்துறையிடமிருந்த மொத்தத் தொகுதி நிலையான வைப்புக்களும், சேமிப்புவைப்புக்களும் 1963ம் ஆண்டில், ரூபா 8423 இலட்சங்களிலிருந்து ரூபா 9116 இலட்சங்களுக்கு ரூபா 693 இலட்சங்களால் அல்லது 8.2 சதவீதத்தால் அதிகரித்தன. நடைமுறைச்சினைக்கொள் விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தியின் விகிதாச்சாரப்படி கூறின், இவ்வைப்புக்கள் 13.1 சதவீதத்திலிருந்து 1963ம் ஆண்டில் கிட்டத்தட்ட 13.5 சதவீதத்திற்கு உயர்ந்தன. ஆனால் தனிப்பட்டோர்துறையிடமிருந்த திரவ இருப்புச்சொத்துக்களின் மொத்தத் தொகுதியில் இவ்வைப்புக்களின் தொடர்பான பங்கு, 31.8 சதவீதத்திலிருந்து 31.0 சதவீதத்திற்குக் குறைந்தது. இரண்டாந் திரவஇருப்புச் சொத்துக்களின் மொத்தத் தொகுதியில் அவற்றினது பங்கு 64.4 சதவீதத்திலிருந்து 63.7 சதவீதத்திற்குக் குறைந்தது.

வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை, சேமிப்பு வைப்புக்கள் ரூபா 634 இலட்சங்களால் அதிகரித்தன—1963ம் ஆண்டிற் தவணை, சேமிப்பு வைப்புக்களின் மொத்த அதிகரிப்பில் 61.7 சதவீதத்திற்கு வழிகாட்டி, சேமிப்பு வைப்புக்கள் ரூபா 243 இலட்சங்களாலும், தவணை வைப்புக்கள் ரூபா 391 இலட்சங்களாலும் அதிகரித்தன. தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் ரூபா 62 இலட்சங்களால் அல்லது 1.7 சதவீதத்தால் உயர்ந்திருக்கையில், இலங்கைச் சேமிப்பு வங்கியிடமுள்ளவை ரூபா 3 இலட்சங்களால் அல்லது 0.4 சதவீதத்தால் குறைவுற்றன.

அண்மை வருடங்களில் வர்த்தக வங்கிகளிடமுள்ள சேமிப்பு வைப்புக்களினதும் தவணை வைப்புக்களினதும் தொடர்ந்த அதிகரிப்பானது, இந்நிலுவைகளின் நடமாட்டங்களை மிக அவதானத்துடன் படிக்கவேண்டிய தேவையை வலியுறுத்துகின்றது. இந்நிலுவைகளின் நடத்தை பற்றிய அநுபவம், இந்நிலுவைகளின் உயர்ச்சியானது எவ்வளவு தூரம் வைப்பு வைத்திருப்போரின் சேமிப்பதற்கான தீர்மானங்களைக் காட்டும் என்பதைப்பற்றித் திட்டவட்டமாக உய்த்துணருவதற்கு, இன்னமும் மிகக் குறுகியதொன்றாகும். ஆனால் கிடைத்திருக்கும் தரவு, கடைசி தற்போதுள்ள விரிவடையும் காலப்பகுதியிலாவது இந்நிலுவைகளின் வளர்ச்சி, தபாற் கந்தோர் சேமிப்பு வங்கி போன்ற வழமையான சேமிப்பு நிலையங்கள் வைத்திருக்கும் நிலுவைகளிலிருந்து வேறுபட்ட பண்புள்ளது என்ற கருதுகோளிற்கு, இயைபானது. வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை, சேமிப்பு வைப்புக்களிலும் பார்க்க, இலங்கையிலுள்ள கேள்விவைப்புக்கள் சராசரிப் படியாகப் பத்து மடங்கு நிலைபேறற்றதாக உள்ளன. ஆனால் 1963ம் ஆண்டில் வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை சேமிப்புப்பொறுப்புக்களின் வளர்ச்சியானது, அவற்றினது அதிகரிப்பான உபயோகத்தின் 21 சதவீத உயர்ச்சியுடன் சேர்ந்து வந்திருந்தது என்பது 1(ஈ)யிற் காட்டப்பட்டுள்ளது. மேலும், தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியிலுள்ள வைப்புக்கள், உண்மையிற் சமுதாயத்தின் வறிய வகுப்புகளுக்குச் சொந்தமாக இருந்தபோதும், வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை சேமிப்பு வைப்புக்கள் போலக் கிட்டத்தட்ட எட்டு அல்லது பத்து மடங்கு நிலைபேறுடையன என்பதைக் கிடைத்திருக்கும் தரவு உணர்த்துகின்றது. வர்த்தக வங்கிகளிடமுள்ள இவ்வைப்புக்கள் நடைமுறைச் செலவுகளுக்குத் தேவையான நிதிகளையும், உண்மையான சேமிப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளையும் கொண்டிருக்கின்றன என்பது சாத்தியமாக இருக்கலாம். இதுவே உண்மையானதாக இருக்குமளவும், கேள்வி வைப்புக்களினதும் சேமிப்புவைப்புக்களினதும் பொருளாதார வேற்றுமை ஓரளவு மறைவானதாக இருக்க நேர்கிறது. இது எவ்வகையாயிருப்பினும், இந்நிலுவைகளின் தொடர்ச்சியான வளர்ச்சியுடன் அவற்றினது திரவத் தன்மைப் பகுதிகள் அதிகரித்த முக்கியத்துவத்தை ஏற்கின்றன.

**1. (இ) அரசாங்கப்பிணைகள்**

முன்னர் கூறியபடி, தனிப்பட்டோர்துறையிடமுள்ள* அரசாங்கப் பிணைகளின் தொகுதி, 1962ம் ஆண்டிலிருந்த ரூபா 3925 இலட்சங்களிலிருந்து, 1963ம் ஆண்டில் ரூபா 4466 இலட்சங்களுக்கு, ரூபா 541 இலட்சங்களால் அல்லது 13.8 சதவீதத்தால் அதிகரித்தது. தனிப்பட்டோர்துறையிடமுள்ள அரசாங்கப்பிணைகளினது விகிதாச்சாரம் அவற்றினது மொத்தத் திரவ இருப்புச்சொத்துக்களுக்கு 14.8 சதவீதத்திலிருந்து 15.2 சதவீதத்திற்கு உயர்ந்தது. மொத்த இரண்டாந்தர திரவ இருப்புச்சொத்துக்களுக்குப் பிணைகளினது விகிதாச்சாரம் 30.0 சதவீதத்திலிருந்து, 1963ம் ஆண்டில் 31.2 சதவீதத்திற்கு மேனோக்கிச் சென்றது.

1963ம் ஆண்டில் அரசாங்கப்பிணைகளினது இருப்புச்சொத்துக்களின் உயர்ச்சி, நம்பிக்கைப் பொறுப்புக்கள், சேமநிதி, உபகாரச்சம்பளநிதிகள், காப்புறுதித்துறை ஆகிய பலவித பகுதிகளின் விரிவை, முக்கியமாகப் பிரதிபலித்தது. தனியாளுக்கான இருப்புச்சொத்துக்கள் ரூபா 10 இலட்சங்களால் அதிகரித்தன. 1963ம் ஆண்டில் ரூபா 541 இலட்சங்கள் கொண்ட அதிகரிப்பு, முக்கியமாகப் புதுமிதப்புகளுக்கு ஒப்பப்பணங்களாக அதுவும் அநேகமாக நீண்டகால முதிர்ச்சியோடு கூடியவற்றைப் பிரதிபலித்தது. முதிர்ச்சிக்காலம் எவ்வளவு நீண்டிருக்குமோ, உண்மையில் அதற்களவாகக் குறைந்த தன்மை

* தபாற் கந்தோர் சேமிப்புவங்கி, இலங்கை சேமிப்பு வங்கி, ஊழியர் சேமநிதி முதலியன தவிர்த்து.

யினதாக அரசாங்கப்பிணைகளினது திரவத்தன்மையின் அளவு அமைந்திருக்கும். தனிப்பட்டோர் துறையினது பிணைப்பகுதியின் திரவத்தன்மை அளவு, 1963ம் ஆண்டிற் பிணைவிகிதத்தின் அதிகரிப்புடன் ஓரளவு குறைந்துவிட்டது. இது பிணைப்பகுதியின் அளவில் ஏற்பட்ட விரிவினுலுண்டாகிய திரவத்தன்மையினது அதிகரிப்பில் ஒரு பகுதியை ஈடுசெய்தது.

1. (ஈ) சுழல்வு விகிதங்கள்

மேலே விவரிக்கப்பட்டுள்ள மொத்தத் திரவத்தன்மையின் வளர்ச்சி, 1963ம் ஆண்டில் நாணயச் சுழல்வு விகிதங்களிற் சில முக்கியமான மாற்றங்களுடன் சேர்ந்து வந்தது.

தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியில் உள்ள சேமிப்பு வைப்புக்களினது சராசரி மட்டமானது, 1962ம் ஆண்டிலிருந்ததைவிட 1963ம் ஆண்டில் ரூபா 105 இலட்சங்களால் அல்லது 3.0 சதவீதத்தால் கூடியதாக இருந்தது. ஆனல் இவ்வைப்புக்களினது மாதாந்தச் சராசரிச் சுழல்வு வீதங்கள், சுழல்வு விகிதத்தில் 8.7 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்து, 1962ம் ஆண்டிலிருந்த 0.023ல் இருந்து, 1963ம் ஆண்டில் 0.021க்குக் குறைந்தன. வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை சேமிப்பு வைப்புக்களினது தொகுதியானது, சென்ற வருடத்தைவிட 1963ம் ஆண்டில் சராசரிப் படியாக ரூபா 647 இலட்சங்களால் அல்லது 17.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. வர்த்தக வங்கிகளிடமுள்ள இவ்விருதரப்பட்ட வைப்புக்களினதும் ஒன்றுசேர்ந்த மாதாந்தச் சராசரிச் சுழல்வு விகிதமானது, 0.14லிருந்து 0.17க்கு அதிகரித்தது. (21.4 சதவீதம்).

1962ம் ஆண்டின் முதலாவது அரையாண்டிற் கேள்வி வைப்புக்களின் சராசரி மட்டமும், அத்துடன் மொத்தப் பணநிரம்பலின் சராசரி மட்டமும், வர்த்தக வங்கி ஊழியர்களது தொடர்ந்து நீடிக்கப்பட்ட வேலைநிறுத்தத்தினுற் செயற்கை முறையாகப் பாதிக்கப்பட்டன. முழுவருடத்திற்குமாகத் தெரிவு செய்யக்கூடிய இதற்கான சராசரி, 1962ம் ஆண்டின் கடைசி ஆறு மாதங்களுக்குமான சராசரியாகும். இவ்வடிப்படையிற் கேள்விவைப்புக்களினதும், பணநிரம்பலினதும் சராசரி மட்டமானது, 1962ம் ஆண்டில் முறையே, ரூபா 5990 இலட்சங்களும், ரூபா 13011 இலட்சங்களுமாகும். ஆகவே சென்ற வருடத்திலும் பார்க்கக், கேள்விவைப்புக்களினது சராசரி மட்டமானது, 1963ம் ஆண்டில் ரூபா 604 இலட்சங்களால் அல்லது 10.1 சதவீதத்தால் உயர்ந்ததாக இருந்தது. கேள்வி வைப்புக்களினது மாதாந்தச் சராசரிச் சுழல்வு விகிதமானது, 1962ம் ஆண்டிலிருந்த 1.81லிருந்து 1963ம் ஆண்டில் 1.72க்கு 5 சதவீதத்தாற் குறைவுற்றது. அதே அடிப்படையிற் பணநிரம்பலானது 1962ம் ஆண்டிலிருந்ததைவிட 1963ம் ஆண்டில் ரூபா 14455 இலட்சங்கள் அல்லது 11.1 சதவீதம் உயர்ந்திருக்கையில், பணத்தினது வருமான வேகமானது, (மொ.தே.உ. நடைமுறைச்சினைக்கொள் விலைகளின்படியானதைப் பணநிரம்பலாற் பிரித்து) 1962ம் ஆண்டிலிருந்த 4.93லிருந்து 1963ம் ஆண்டில் 4.65 ஆக அல்லது 5.7 சதவீதமாகக் குறைந்தது. இச்சுழல்வு விகிதங்களின் வீழ்ச்சி, சந்தேகமின்றி, மேலே கூறப்பட்ட உள்நாட்டுத் திரவத்தன்மையினது உயர்ந்த அதிகரிப்புக்குச் சார்பாக ஒரு பகுதி தானுகவே அமைந்த சீராக்கமாகவும், மிகுதிப்பகுதி திரவ இருப்புச் சொத்துக்களின் பங்கீட்டின் உடமையினது மாற்றத்தின் விளைவாகவும், ஏற்பட்டது.

### 1. (உ) வட்டிவிகிதங்கள்

கூட்டுநிலேயப்பங்குகளாற் பெறப்பட்ட முற்பணங்கள் மீதுள்ள வர்த்தக வங்கி விகிதம் தவிர்த்து, பணச்சந்தையின் நிறுவப்பட்ட துறையிலுள்ள குறுகியகாலக் கடன்களுக்கான வட்டி விகிதங்களெல்லாம், 1963ம் ஆண்டில் மாற்றமின்றி இருந்தன. இக் கூட்டுநிலேயப்பங்குகளாற் பெறப்பட்ட வங்கி முற்பணங்களின் மீதான உயர்ந்தபட்ச வட்டி விகிதமானது, வருடத்திற்கு 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்திற்கு உயர்ந்தது. ஆனுற் குறைந்தபட்ச வட்டி விகிதமானது, வருடத்திற்கு $5\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. இது எவ்வாருயினும், இலங்கையில் வங்கிகள் வழங்கும் மொத்த முற்பணங்களிற் கூட்டுநிலேயப் பங்குகளாற் சாதாரணமாகப் பெறப் பட்டவை, குறைந்த விகித சமமாக மட்டுமே (ஏறக்குறைய 5 சதவீதம்) இருப்பதனுல், இம்மாற்றங்கள் நடைமுறையிற் சிறு முக்கியத்துவமுடை யனவாக இருந்தன.

நீண்டகாலக் கடன்களுக்கான சந்தையிலே, 10,000 ரூபாய்களுக்கு மேற்படாத கடன்களுக்கு இலங்கைச் சேமிப்பு வங்கியினுல் விதிக்கப்பட்ட வட்டி விகிதங்கள், 4.5 சதவீதத்திலிருந்து 5.0 சதவீதத்திற்கு அதிகரித்தன. 10,000 ரூபாய்களுக்கு மேற்பட்ட, ஆனுல் 40,000 ரூபாய்களுக்குட்பட்ட கடன்களுக்கு விதிக்கப்பட்ட வட்டி விகிதங்கள் 4.5 சதவீதத்திலிருந்து $5\frac{1}{2}$ சதவீதத்திற்கு உயர்ந்தன. தேசிய வீடமைப்புத் திணைக்களத்தால் வதிவுக் கட்டடங்களுக்காக வழங்கப்பட்ட, எல்லா அளவுப் பகுப்புக்களுக்கு மான கடன்களின் மீதுள்ள வட்டிவிகிதங்கள், $\frac{1}{4}$ சதவீதத்தால் அதிகரித்தன. நீண்டகால அரசாங்கப்பிணைகளின் புதிய வெளியீடுகள் மீதான வட்டி விகிதம், $4\frac{1}{4}$ சதவீதத்திலிருந்து 1963ம் ஆண்டு, ஆனிமாதம், $4\frac{1}{2}$ சதவீதத் திற்கு உயர்த்தப்பட்டது. இம்மாற்றத்தைத் தொடர்ந்து, வருடத்தின் கடைசிப்பகுதியில் அரசாங்கப்பிணைகளின் அளவு அதிகரிப்பதற்கான தன்மை காணப்பட்டது.

ஆகவே உள்நாட்டுத் திரவத்தன்மையிற் பெரிய அதிகரிப்பு இருந்தும், 1963ம் ஆண்டானது, பெருமளவினதாக வட்டி வீதங்கள் நிலைபேறுடையன வாக விளங்கிய வருடமாக இருந்தது. பணச்சந்தையிலே அதன் அமைப் பினது ஊராய்வுகளும், குறைபாடுகளும், வர்த்தகத்தொழிற்துறைகள் பணத்தைக் கையிருப்பில் வைத்திருப்பதற்கு நாடும் தன்மையின் அதிகரிப்பும் அத்துடன் இறக்குமதி வர்த்தகத்தில் முதலீட்டத்திற்கான சந்தர்ப்பங்கள் குறைவுற்றமையும், நுகர்வோர் இறக்குமதிப் பொருட்கள் கொள்வனவு செய்தற்கான வாய்ப்புக்கள் குறுகியமையும், ஆகிய பலவகைப்பட்ட இயக்கங் களை இவ்வாண்டு பிரதிபலித்தது. மேலே பொதுவாகக் கூறப்பட்டுள்ளபடி, முக்கியமாக வருடத்தின் கடைசி அரையாண்டின் போது, வட்டி விகிதங் களின் அமைப்பினது கடைசி எல்லேயில் வட்டி விகிதங்கள், இறுக்கமடை தற்கான ஒரு சிறு போக்கு ஓர்ந்து கொள்ளத்தக்கதாக இருந்தது.

### 2. வர்த்தக வங்கித் தொழிற்பாடுகள்

1963ம் ஆண்டானது, வர்த்தக வங்கிகளின் தொழிற்பாடுகள் தொடர்ந்து விரிவடைதலேக்கொண்ட ஓர் ஆண்டாக, விளங்கியது. இது, தனிப்பட்டோர்துறைக்கான வைப்புச்சொத்துக்கள், முற்பணங்கள் ஆகிய இரண்டிலும் பெரிய அதிகரிப்புகளையும், அவற்றினது பரந்து செல்லும் கிளைகள் மேலும் விரிவடைதலேயும், சிறப்பியல்பாகக் கொண்டிருந்தது. 1963ம் ஆண்டு வங்கிகளிடம் சேர்ந்த வைப்புச் சொத்துக்கள், 1962ம் ஆண்டிலிருந்த இதற்குத் தொடர்பான தொகையிலும் பார்க்கக் கூடுதலாக இருந்தன. தனிப்பட்டோர்துறையுடனுள்ள அவற்றினது கொடுகடன்

தொழிற்பாடுகளின் விரிவு, 1962ம் ஆண்டிலிருந்ததை விடப் பெரிய அளவின தாக இருந்தது. 1962ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வங்கிகளின் ஆவணங் களாகிய அரசாங்கப்பிணைகளில், அதிகரிப்பு ஏதும் ஏற்படவில்லை. மேலும், வங்கித்தொழில் முறைமையின் இலங்கையினது பகுதியிலேயே, வங்கித் தொழிலின் விரிவடைதலானது ஒடுக்கப்பட்டிருந்தது. வங்கித்தொழில்முறை மைக்குக் கிடைக்கக்கூடிய திரவச் சொத்துக்கள், வங்கி முற்பணங்கள் வழங்குவதில் ஏற்பட்ட பெரிய விரிவின் விளைவாக ஓரளவு சிறிய வீழ்ச்சியை யடைந்த போதிலும், இதுவரை பெரும்பாலும், உள்ளபடியாக மாற்றம் எதுவும் இன்றி இருந்தன.

## 2. (அ) கிளைகள்

புதிய ஏழு வங்கி அலுவலகங்கள் மக்கள் வங்கியாலும், மூன்று அலு வலகங்கள் இலங்கை வங்கியாலும் நிறுவப்பட்டு, 1963ம் ஆண்டில், நாட்டி லுள்ள வர்த்தக வங்கி அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை, 83க்குக் கொண்டுவரப்பட்டது. 1963ம் ஆண்டு தமது தொழிற்பாடுகளை ஆரம்பித்த புதிய அலுவலகங்கள், கொழும்பு, யாழ்ப்பாணம், நீர்கொழும்பு, அவிசா வளை, அம்பலாங்கொடை, காங்கேசன்துறை, ஏகல, மாத்தறை, அப்புத்தளை, ஆகிய இடங்களிற் தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, புதிய பத்து அலு வலகங்களில், எட்டு அலுவலகங்கள் கொழும்புக்கு வெளியேயும், இவற்றுள் ஐந்து அலுவலகங்கள், முன்பு வங்கிவசதிகள் இல்லாதிருந்த நகரங்களிலும், நிறுவப்பட்டிருக்கின்றன.

1963ம் ஆண்டு இறுதியிலிருந்த மொத்த எண்ணிக்கையாகிய 83 வங்கி அலுவலகங்களில், 57 அலுவலகங்கள் கொழும்புக்கு வெளியே நிறுவப்பட் டுள்ளன. இம்மொத்த எண்ணிக்கையில் 67 அலுவலகங்கள் இலங்கை வங்கி களாற் தொழிற்படுத்தப்படுகின்றன. இலங்கை வங்கிகள், கொழும்புக்கு வெளியே தொழிற்பாடுகளை நடத்தும் 52 கிளைகளைக் கொண்டிருக்கின்றன. இலங்கையிலே, 1962ம் ஆண்டில் 143041 ஆட்களுக்கு ஒரு வங்கி ஆக இருந்ததற்கெதிராக, 1963ம் ஆண்டு 129060 ஆட்களுக்கு ஒரு வங்கி இருந்தது.

அண்மையில் வங்கிகளின் கிளைகள் விரிவடையும் விகிதங்கள் அதிகரித் திருந்த பொழுதிலும், கொழும்புக்கு வெளியேயுள்ள கிளை அலுவலகங்களின் எண்ணிக்கை, தேசியத் தேவைகளுக்குப் போதுமான அளவிலும் பார்க்க, இன்னமும் குறைந்த மட்டத்திலேயே இருக்கின்றது. எனினும், தற்போதைய நிலையில் ஏற்கனவே நிறுவப்பட்ட கிளைகளைப் பலப்படுத்துவதற்கான முயற்சி, மேலும் கிளைகள் நிறுவுவதற்கான திட்டங்களுக்குக் கொடுக்கும் முக்கியத்து வம் போன்ற அதேயளவு முக்கியத்துவத்தைப் பெறவேண்டும்.

புதிய பிரதேசங்களுக்கும் அத்துடன் (அநேகமாக) புதிய பொரு ளாதார, சமூக வகுப்புக்களுக்கும், வங்கி வசதிகள் விரிவடைந்தமை, அண் மை வருடங்களில் நிதித்துறையிற் குறிப்பிடத்தக்கவொரு சாதனையாகும். என்றாலும், வங்கி வசதிகளற்ற பிரதேசங்களுக்கு, மேலும் வங்கி வசதிகள் விரிவடைவதற்குச் சந்தேகத்திற்கிடமின்றி அவசியம் இருந்த போதிலும், சிக்கலான பிரச்சனையாகிய ஊருக்குரிய கொடுகடன், வர்த்தக வங்கித் தொழில் ஒன்றினால் மட்டும் திருப்திகரமாகத் தீர்க்கப்படமாட்டாது. இதைப் போன்ற சரிநிகரான ஓர் சீர்திருத்தம் கூட்டுறவுத் தாபனக் கொடு கடன் இயக்கத்தின் திறமையில், குறிப்பாக ஆரம்ப நிலையிலே, அத்தியா வசியமான தேவையாகும்.

வங்கி வைப்புச் சொத்துக்களின் பங்கீடும், வங்கி அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கையில், இலங்கை வங்கிகளுக்கும், பிரித்தானிய, இந்திய, ஏனைய வங்கிகளுக்கும் இடையேயுள்ள வங்கி அலுவலகங்களின் பங்கீடும், அட்டவணை II உ-7ற் காட்டப்பட்டுள்ளன.

### அட்டவணை II உ-7
### வங்கி அலுவலகங்களினதும் வைப்புக்களினதும் பங்கீடு, 1961-63

| | மொத்தம் | | | இலங்கை வங்கிகள் | | | பிரித்தானிய வங்கிகள் | | | இந்திய வங்கிகளும் ஏனைய வங்கிகளும் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வைப்புக்கள் | | | வைப்புக்கள் | | | வைப்புக்கள் | | | வைப்புக்கள் | |
| | அலுவலகங்களின் எண்ணிக்கை | இலட்ச ரூபாய்கள் | % | அலுவலகங்களின் எண்ணிக்கை | இலட்ச ரூபாய்கள் | % | அலுவலகங்களின் எண்ணிக்கை | இலட்ச ரூபாய்கள் | % | அலுவலகங்களின் எண்ணிக்கை | இலட்ச ரூபாய்களில் | % |
| 1961 | 54 | 1041 | 100 | 37 | 503 | 48 | 12 | 467 | 45 | 5 | 71 | 7 |
| 1962 | 73 | 1182 | 100 | 57 | 683 | 58 | 12 | 429 | 36 | 4 | 70 | 6 |
| 1963 | 83 | 1301 | 100 | 67 | 801 | 61 | 12 | 412 | 32 | 4 | 88 | 7 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

2. (ஆ) நிதிவளங்களும், அவற்றினது மூலங்களும் பயன்பாடுகளும்

*1963*ம் ஆண்டிலுள்ள வர்த்தக வங்கிகளின் நிதி வளங்களினதும், அவற்றின் பயன்பாட்டினதும் மாற்றங்களைக் கடந்த இரு ஆண்டுகளில் ஒவ்வொன்றுடனும் ஒப்பிட்டும், துறைகளின்படி பாகுபடுத்தியும் அட்டவணை II உ-*8* தருகின்றது.

### அட்டவணை II உ-8
### வங்கிகளின் வளங்களினதும் அவற்றின் பயன்பாட்டினதும் மாற்றங்கள், 1960-63

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1961 | 1962 | 1963 |
|---|---|---|---|
| **நிதிகளின் மூலங்கள்** | | | |
| **1. அரசாங்கத்துறை** .. .. .. .. | — | **84·8** | **14·8** |
| கடன்பாடுகளின் அதிகரிப்பு .. .. | — | 5·0 | — |
| அரசாங்கப் பிணைப்பத்திரங்களினது இருப்புச் சொத்துக்களின் குறைவு .. .. .. | — | — | 5·5 |
| வைப்புக்களின் அதிகரிப்பு .. .. .. | — | 79·8 | 9·3 |
| **2. மகாவங்கியிடமிருந்து பெற்ற கடன்பாடுகளின் அதிகரிப்பு** .. .. .. | — | — | **37·9** |
| **3. உள்நாட்டுத் தனிப்பட்டோர் துறை** .. .. | **80·0** | **125·0** | **115·3** |
| வைப்புக்களின் அதிகரிப்பு .. .. | — | 82·4 | 109·9 |
| ஒதுக்குநிதிகள், செலவிறுக்கப்பட்ட முதல் ஆகியவற்றின் அதிகரிப்பு .. .. .. | 8·8 | 7·5 | 5·4 |
| ஏனைய பொறுப்புக்களின் அதிகரிப்பு .. .. | 71·2 | — | — |
| ஏனைய இருப்புச் சொத்துக்களின் வீழ்ச்சி .. .. | — | 35·1 | — |
| **4. வெளிநாட்டுத் துறை** .. .. .. .. | **10·0** | **5·6** | **8·2** |
| வெளிநாட்டு மிச்சங்களின் குறைவு .. .. | 10·0 | 5·6 | 8·2 |
| **5. உள்நாட்டுப் பண விடயங்களினது குறைவு** | **35·4** | — | **1·1** |
| நிதிகளின் மொத்த அதிகரிப்பு .. .. | **125·4** | **215·4** | **177·3** |
| **நிதிகளின் பயன்பாடுகள்** | | | |
| **1. அரசாங்கத் துறை** .. .. .. .. | 35·5 | **71·4** | — |
| கடன்பாடுகளின் குறைவு .. .. .. | 2·0 | — | — |
| அரசாங்கப் பிணைப்பத்திரங்களினது இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பு .. .. .. | 21·4 | 71·4 | — |
| வைப்புக்களின் மீட்சி .. .. .. | 12·1 | — | — |
| **2. மகா வங்கியிடமிருந்து பெற்ற கடன்பாடுகளின் குறைவு** .. .. .. .. | 0·4 | 20·6 | — |
| **3. உள்நாட்டுத் தனிப்பட்டோர் துறை** .. .. | 89·4 | 88·1 | **176·1** |
| வைப்புக்களின் மீட்சி .. .. .. | 21·2 | — | — |
| முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு .. .. | 19·0 | 41·2 | 136·8 |
| ஏனைய பொறுப்புக்களின் குறைவு .. .. | — | 46·9 | 1·5 |
| ஏனைய இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பு .. | 49·2 | — | 37·8 |
| **4. வெளிநாட்டுத்துறை** .. .. .. | **2·9** | **4·2** | **1·3** |
| கடன்பாடுகளின் குறைவு .. .. .. | 0·6 | 3·5 | 0·6 |
| வைப்புக்களின் மீட்சி .. .. .. | 2·3 | 0·7 | 0·7 |
| **5. உள்நாட்டுப் பண விடயங்களின் அதிகரிப்பு** .. | — | **30·6** | — |
| நிதிவளங்களினது பயன்பாட்டின் மொத்த அதிகரிப்பு .. | **128·2** | **214·9** | **177·4** |

மூலம்: இலங்கை மகா வங்கி.

1963ம் ஆண்டில், எல்லா மூலங்களாலும் வங்கிகளினது தொழிற்படு வளங்கள் 1773 இலட்ச ரூபாய்களால் அதிகரித்தன. அவற்றில், 148 இலட்ச ரூபாய்கள் அரசாங்கத்துறையிலிருந்தும் (வைப்புக்கள் வடிவத்திலும், வங்கிகளிடமுள்ள முதலீடுகளினது குறைவின் வடிவத்திலும்), 379 இலட்ச ரூபாய்கள் மகாவங்கியிடமிருந்து பெற்ற கடன்பாடுகளின் வழியாலும், 1099 இலட்ச ரூபாய்கள் உள்நாட்டுத் தனிப்பட்டோரது வைப்புக்களின் திரட்சியிலிருந்தும், வந்தன. வங்கிகள் அவற்றின் வெளிநாட்டு மிச்சங்களேயும் 82 இலட்ச ரூபாய்களாற் குறைத்தன. ஆதலின், உள்நாட்டுத் தனிப்பட்டோரது வைப்புக்களின் திரட்டுதல், 1963ம் ஆண்டில், சென்ற வருடத்திலிருந்ததை விடப் பெருமளவினதாக இருந்தது. எனினும், அரசாங்க வைப்புக்களின் ஈட்டம் மிகச் சிறிதாகவே இருந்தது. இந்நிதி வளங்கள் வங்கிகளால் முக்கியமாகத் தனிப்பட்டோர்துறைக்கான அவற்றினது முற்பணங்களே 1368 இலட்ச ரூபாய்களால் அதிகரிப்பதற்கும், அவற்றினது நிலேயான இருப்புச் சொத்துக்களேயும் ஏனேய பல்வகைப்பட்ட இருப்புச் சொத்துக்களேயும் 378 இலட்ச ரூபாய்களால் அதிகரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன. ஆகவே, வங்கிகள் அவற்றின் நிதிகளே முக்கியமாக, ''அரசாங்க'' ஆவணங்களே 714 இலட்ச ரூபாய்களால் நிரப்புவதற்கும், அவற்றின் ''ஏனேய'' பொறுப்புக்களே 469 இலட்ச ரூபாய்களாற் குறைப்பதற்கும், அவற்றின் முற்பணங்களே 412 இலட்ச ரூபாய்களால் விரிவாக்குவதற்கும், பணநிலவரத்தை 306 இலட்ச ரூபாய்களாற் பலப்படுத்துவதற்கும் உபயோகப்படுத்திய, 1963ம் ஆண்டின் அதிகரித்த நிதிவளங்களின் பாவிப்பு, 1962ம் ஆண்டில் அநுட்டிக்கப்பட்ட விதத்தைவிடத் தீட்சணமாக வேறுபட்டிருந்தது.

1962ம் ஆண்டிலிருந்ததைப் போலவே, 1963ம் ஆண்டில், காரியத்தளவில் வைப்புச் சொத்துக்களின் முழு அதிகரிப்பும், இலங்கை வங்கித் தொழிற் துறைகட்கே சென்றடைந்தது. ஆயினும் (வெளிநாட்டு வங்கிகள் வைத்திருந்த வைப்புச் சொத்துக்கள் 1962ம் ஆண்டின் போது 390 இலட்ச ரூபாய்களால் வீழ்ச்சியுற்றதைப் போலல்லாது) 1963ம் ஆண்டின் போது, வெளிநாட்டு வங்கிகளின் வைப்புச் சொத்துக்களில் மிகச்சிறு அதிகரிப்பொன்று காணப்பட்டது. 1963ம் ஆண்டின்போது தனிப்பட்டோர்துறைக்கு வங்கிகள் இணக்கமளித்த தொகையின் பெரிய அதிகரிப்பானது, இதைப் போலவே, முழுமையாக அல்லாவிடினும் முக்கியமாக, இலங்கையிலுள்ள வங்கிகளினது தொழிற்பாடுகளின் அதிகரிப்பைப் பிரதிபலித்தது.[1]

### 2. (இ) வங்கிப்பொறுப்புக்களின் அமைப்பு

பின்னிணைப்பின் அட்டவணே 4ஐ அடிப்படையாகக் கொண்டு, அட்டவணே II உ-9, வர்த்தக வங்கித் தொழிற்பாட்டு முறைமையின் இருப்புச் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் பங்கீடு பற்றிய பாகுபாட்டைத் தருகிறது. இவ் அட்டவணே, இருப்புச்சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும், வழமையாகக் கொடுக்கப்படும் மாதாந்தச் சராசரி மட்டத்தின் படியான தகவலுக்குக் கூடுதலாக, 1962ம் ஆண்டினதும், 1963ம் ஆண்டினதும் வருட முடிவிற்கான தரவுகளேயும் உட்படுத்துகின்றது. இவ்வருடத்தின் ஆரம்பப் பகுதியில், வர்த்தக வங்கிகளின் ஊழியர்களால் வேலேயானது நீடித்துத் தடைப்பட்டதன் விளேவினுலே, 1962ம் ஆண்டினது சராசரி எண்தொகைகள் குறைபாடுடையனவாயிருப்பதையிட்டு, வருடமுடிவிற்கான எண்தொகைகளே உட்படுத்துதல், அத்தியாவசியமானதாகும். இக்குறிப்பிட்ட வருடங்களினது பாகுபாட்டுத்தேவைகளுக்கு, வருடமுடிவிற்கான எண்தொகைகள் சராசரி எண்தொகைகளே விட மிகவும் நம்பத்தகுந்தவையாகும்.

---

1. 1961ம் ஆண்டின் நிதி அதிகாரச்சட்டத்தினது விதிகளுக்கிணங்க, இலங்கைப் பிரஜைகளாலும், கூட்டு நிலேயங்களாலும் திறக்கப்படும் புதிய கணக்குகள், 1961ம் ஆண்டு, ஆடி மாதம், 27ம் திகதி முதல், இலங்கை வங்கிகளுள் மட்டுமே ஒடுக்கப்பட்டிருக்கின்றன.

1962ம் ஆண்டிலிருந்த 1175 இலட்ச ரூபாய்கள் கொண்ட அல்லது 9.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டிலே, வங்கித் தொழிற்பாட்டு முறைமையினது மொத்தப் பொறுப்புக்கள் (இருப்புச்சொத்துக்களும் சேர்த்து), 13796 இலட்ச ரூபாய்களிலிருந்து 15284 இலட்ச ரூபாய்களுக்கு, 1488 இலட்ச ரூபாய்களால் அல்லது 10.8 சதவீதத்தால் அதிகரித்தன. 1963ம் ஆண்டில் ஏற்பட்ட மாற்றம், வைப்புப் பொறுப்புக்களின் (1188 இலட்ச ரூபாய்களால் அல்லது 10.0 சதவீதத்தால் ஆன) அதிகரிப்புகளையும், மகாவங்கிக்கு வர்த்தக வங்கிகளின் (379 இலட்ச ரூபாய்கள் கொண்ட) கடன்பாட்டையும், கொண்டிருந்தது. மொத்தப் பொறுப்புக்களுக்கு மொத்த வைப்புச் சொத்துக்களின் விகிதம், 1962ம் ஆண்டிற்குரிய 85.7 சதவீதத்திலிருந்து, 1963ம் ஆண்டில் 85.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது.

1963ம் ஆண்டிலே, வைப்புப் பொறுப்புக்களின் அமைப்பும் ஓரளவில் மாற்றமடைந்தது. வர்த்தக வங்கிகளிடமிருந்த அரசாங்க வைப்புக்கள்—(இவ்வைப்புக்கள் தனிப்பட்டோர் வைப்புக்களைவிட மிகக்கூடிய சுழல்வு விகிதத்தையுடையன) ஆக 93 இலட்ச ரூபாய்களால் அல்லது 6.3 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், ஏனைய வைப்புக்கள் 1095 இலட்ச ரூபாய்களால் அல்லது 10.6 சதவீதத்தால் அதிகரித்தன. மொத்த வைப்புக்களுக்கு அரசாங்க வைப்புக்களின் விகிதம், 1962ம் ஆண்டிலிருந்த 12.5 சதவீதத்திலிருந்து, 1963ம் ஆண்டு 12.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. கேள்வி வைப்புக்களினது மொத்தத் தொகுதி—(அரசாங்கம், தனிப்பட்டோர் ஆகிய இரண்டினதும்)—460 இலட்ச ரூபாய்களால் அல்லது 6.1 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், தவணை, சேமிப்பு வைப்புக்களின் மொத்த மட்டம், 728 இலட்ச ரூபாய்களால் அல்லது 17.1 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த வைப்புக்களுக்குக் கேள்வியினது விகிதம், 63.9 சதவீதத்திலிருந்து 61.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. ஆதலின், கேள்விவைப்புக்களினது சுழல்வு விகிதத்தின் வீழ்ச்சி பற்றி மேலே பகுதி 1 (ஈ)யிற் கூறப்பட்டதற்கு முற்றிலும் புறம்பாக, 1963ம் ஆண்டில், நீண்டகாலத் தவணை வைப்புக்களின் திசையில், வைப்புப் பொறுப்புக்களினது முதிர்ச்சிவகையின் அமைப்பிலே மாற்றமுண்டாவதற்கான போக்கின் தொடர்ச்சி, அண்மைக் காலங்களில் ஓர்ந்து கொள்ளத்தக்கதாயிருந்தது.

மகாவங்கியால் நடாத்தப்படும் அரையாண்டு அளவைகளை அடிப்படையாகக்கொண்டு பாகுபடுத்திய வங்கிகளின் வைப்புக்களினது (உடமையாளர்கள்) பங்கீட்டினை, அட்டவணை II உ-10 தருகின்றது. பெருந்தோட்ட வைப்புக்களினது வீழ்ச்சியும், வர்த்தகத் தாபனங்களினது வங்கி மிச்சங்களின் பெரும் அதிகரிப்பும்—(இவை அண்மைக் காலங்களில் உடமையாளர்களின் பங்கீட்டு மாற்றங்களில் மிகக்கூடிய முக்கியத்துவமுள்ளவை)—1963ம் ஆண்டின் போதும் தொடர்ந்து ஏற்பட்டன. தனியாட்களுக்கான வைப்புக்கள் 367 இலட்ச ரூபாய்களால் அதிகரித்தன. நிதித் தாபனங்களினதும், ஏனைய வியாபாரத் தாபனங்களினதும் வைப்புக்கள் வீழ்ச்சியுற்றிருக்கையில், மற்றும் துறைகள் யாவும் அதிகரிப்புகளைக் காட்டின.

## 2. (ஈ) வங்கி இருப்புச் சொத்துக்களின் அமைப்பு

மேலுள்ள பகுதி 2 (இ)யிற் குறிப்பிட்டவாறு, ஒருபகுதி வங்கிப் பொறுப்புக்களின் அமைப்பில் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாகவும், மறுபகுதி இலங்கை வங்கித் தொழிலினூடாகக் கொடுகடனினது தாபனச் சட்டக் கோப்பின் விரிவின் விளைவாகவும், வங்கி இருப்புச் சொத்துக்களின் தொகுதி, அமைப்பு ஆகிய இரண்டிலும், 1963ம் ஆண்டிலே முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டன.

1963ம் ஆண்டிலேற்பட்ட இருப்புச் சொத்துக்களின் மொத்தத் தொகுதியில் 1488 இலட்ச ரூபாய்களால் அல்லது 10.8 சதவீதத்தாலான அதிகரிப்பானது, பிரதானமாக, 975 இலட்ச ரூபாய்களால் அல்லது 21.8 சத வீதத்தாலான கடன்களினதும் மேலதிகப் பற்றுக்களினதும் விரிவைப் பிரதி பலித்தது. திரட்டப்படும் நிலையிலிருக்கும் வர்த்தக உண்டியல்களும், பண விடயங்களும் கூட, முறையே, 216 இலட்ச ரூபாய்களாலும் (அல்லது 18.5 சதவீதம்), 177 இலட்ச ரூபாய்களாலும் (அல்லது 27.5 சதவீதம்) உயர்ந்தன. வங்கிகள், நிலையானவையும் மற்றும் பலவகைப்பட்டவையு மான அவற்றின் இருப்புச் சொத்துக்களை, 378 இலட்சம் ரூபாய்களால் அல்லது 56.9 சதவீதத்தால் அதிகரித்தன. பணமிச்சங்கள், வெளிநாட்டு மிச் சங்கள், இறைசேரி உண்டியல்கள் ஆகியன சிறு வீழ்ச்சிகளையுற்றன.

மொத்த இருப்புச்சொத்துக்களின் விகிதமாகக் கடன்களும், மேலதிகப் பற்றுக்களும், 1962ம் ஆண்டிற்குரிய 32.4 சதவீதத்திலிருந்து 1963ம் ஆண்டில் 35.6 சதவீதத்திற்குத் தீட்சணமாக உயர்ந்தன. வங்கிமுற் பணங்களின் அமைப்பு ஓரளவு நீண்டகாலத் தவணைமுறைகளுக்கு மாற்றப் பட்டிருந்ததற்கான சில சான்றுகளும் இருந்தன.

அரசாங்கப்பிணைகள் 1962ம் ஆண்டிலிருந்த 23.0 சதவீதத்திலிருந்து 1963ம் ஆண்டு, 20.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றன. 1963ம் ஆண்டு முடிவின்போது, வர்த்தக வங்கித் தொழில் முறையானது, அரசாங்க ரூபாப் பிணைகளின் மொத்தத் தொகுதியில், 1962ம் ஆண்டிலிருந்த 20.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 18.3 சதவீதத்தைக் கொண்டிருந்தது. வங்கிகளினது பணமிச்சங்கள், அவற்றின் மொத்த இருப்புச் சொத்துக்களின் விகிதசமமாக, 12.4 சதவீதத்திலிருந்து 11.1 சதவீதத்திற்கும், அவற்றின் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள்,—(திரட்டப்படும் நிலையிலிருக் கும் பணவிடயங்களும் உட்பட)—36.6 சதவீதத்திலிருந்து 36.2 சத வீதத்திற்கும் வீழ்ச்சியுற்றன.

2. (உ) தனிப்பட்டோர் துறைக்கான வங்கிக் கொடுகடன்

மாசி, பங்குனி, ஐப்பசி ஆகிய மாதங்களைத் தவிர, 1963ம் ஆண்டு முழுவதும் தனிப்பட்டோர்துறைக்கு வங்கிகள் இணக்கமளித்த தொகை அதி கரித்தது. இவ் ஆண்டின் முதலாம் காற்பகுதியின் போது, 103 இலட்ச ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சி ஏற்பட்டது. ஆயினும், இவ்வீழ்ச்சியானது, வருடத்தின் மற்றப் பகுதிகளின் போது, 501 இலட்ச ரூபாய்கள், 388 இலட்ச ரூபாய்கள், 405 இலட்ச ரூபாய்கள் ஆகிய கால்வருட அதிகரிப்பு களாற் தொடரப்பட்டது.

இவ் வருடத்தின்போது, கடன்கள் 453 இலட்ச ரூபாய்களாலும், மேலதிகப் பற்றுக்கள் 522 இலட்ச ரூபாய்களாலும், ஏற்றுமதி உண்டியல்கள் 120 இலட்ச ரூபாய்களாலும், இறக்குமதி உண்டியல்கள் 125 இலட்ச ரூபாய்களாலும், திரட்டப்படும் நிலையிலிருக்கும் பணவிடயங்கள், 177 இலட்ச ரூபாய்களாலும் அதிகரித்தன. திரட்டப்படும் நிலையிலிருக்கும் பண விடயங்களில் ஏற்பட்ட 177 இலட்ச ரூபாய்கள் கொண்ட விரிவடைத லானது, உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியை உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் வாங்குவதற்கு உதவுமுகமாக, இலங்கை வங்கிகளினூற் கொடுக்கப்பட்ட குறுகியகால இணக்கமளிப்புக்களின் அதிகரிப்பைப் பெரும் பாலும் பிரதிபலித்தது.

வெளிநாட்டு வங்கிகள் அவற்றினது மொத்த முற்பணங்களை, முக்கிய மாக மேலதிகப்பற்றுக்கள் உருவத்தில் இருக்கின்றவற்றை, 236 இலட்ச ரூபாய்களால் அதிகரித்திருக்கையில், இலங்கை வங்கிகள் அவற்றினது முற் பணங்களை, முக்கியமாகக் கடன்கள், மேலதிகப்பற்றுக்கள் உருவத்தில் இருக்

# அட்டவணை II உ-9

## வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்கள் முதலியனவற்றின் பங்கீடுகள்

(மாத எண் தொகைகளின் சராசரி)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1952 | 1953 | 1954 | 1955 | 1956 | 1957 | 1958 | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1962 மார். | 1963 மார். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையிருப்பிலுள்ள பணமும் (நியதிச்சட்ட முறையான ஒதுக்குப் பணமும் உட்பட) மகாவங்கியில் வைக்கப்பட்ட வைப்புக்களும் .. | 177 | 128 | 106 | 149 | 148 | 139 | 119 | 116 | 132 | 148 | 186 | 164 | 171 | 170 |
| அந்நிய நிலுவைகள் .. .. .. | 97 | 44 | 55 | 112 | 116 | 72 | 50 | 52 | 58 | 54 | 55 | 44 | 41 | 32 |
| இறைசேரி உண்டியல்கள் .. .. .. | 39 | 55 | 60 | 51 | 39 | 34 | 16 | 24 | 28 | 51 | 89 | 128 | 111 | 104 |
| கழிவோடு மாற்றப்பட்ட உண்டியல்களும் ஏனையவைகளும் .. .. .. .. | 64 | 65 | 73 | 94 | 93 | 100 | 116 | 119 | 115 | 122 | 136 | 114 | 117 | 164 |
| மொத்தத் திரவச் சொத்துக்கள் .. .. | 377 | 292 | 294 | 406 | 396 | 345 | 301 | 311 | 333 | 375 | 466 | 450 | 440 | 471 |
| மொத்த முதலீடுகள் (1) .. .. .. | 235 | 235 | 221 | 245 | 291 | 308 | 296 | 285 | 284 | 290 | 303 | 313 | 317 | 318 |
| மொத்தக்கடன்களும் மேலதிகப்பற்றுக்களும் .. | 176 | 182 | 208 | 244 | 273 | 340 | 363 | 395 | 430 | 435 | 477 | 495 | 447 | 545 |
| கேள்விவைப்புக்கள் (2) .. .. .. | 653 | 573 | 562 | 675 | 731 | 721 | 661 | 655 | 657 | 677 | 829 | 789 | 756 | 802 |
| தவணைவைப்புக்களும் சேமிப்புவைப்புக்களும் .. | 95 | 102 | 126 | 190 | 206 | 240 | 263 | 300 | 340 | 359 | 380 | 460 | 426 | 499 |
| மொத்த வைப்புக்கள் .. .. .. | 754 | 677 | 689 | 869 | 941 | 965 | 926 | 955 | 998 | 1036 | 1209 | 1250 | 1182 | 1301 |
| சதவீதம்:— .. .. .. .. | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % |
| கேள்விவைப்புக்களுக்குக் கையிருப்பிலுள்ள பணத்தின் விகிதம் .. .. | 27·1 | 22·3 | 18·9 | 22·1 | 20·2 | 19·3 | 18·0 | 17·7 | 20·1 | 21·9 | 22·4 | 20·8 | 22·6 | 21·2 |
| மொத்தவைப்புக்களுக்குக் கையிருப்பிலுள்ள பணத்தின் விகிதம் .. .. | 23·5 | 18·9 | 15·4 | 17·1 | 15·7 | 14·4 | 12·9 | 12·1 | 13·2 | 14·3 | 15·4 | 13·1 | 14·5 | 13·1 |
| மொத்தவைப்புக்களுக்கு அந்நிய நிலுவைகளின் விகிதம் .. .. .. .. | 12·9 | 6·5 | 8·0 | 12·9 | 12·3 | 7·5 | 5·4 | 5·4 | 5·8 | 5·2 | 4·5 | 3·5 | 3·5 | 2·5 |
| மொத்தவைப்புக்களுக்கு இறைசேரி உண்டியல்களின் விகிதம் .. .. .. | 5·2 | 8·1 | 8·7 | 5·9 | 4·1 | 3·5 | 1·7 | 2·5 | 2·8 | 4·9 | 7·4 | 10·2 | 9·4 | 8·0 |
| மொத்தவைப்புகளுக்குக் கழிவோடு மாற்றப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் .. | 8·5 | 9·6 | 10·6 | 10·8 | 9·9 | 10·4 | 12·5 | 12·5 | 11·5 | 11·8 | 11·2 | 9·1 | 9·9 | 12·6 |
| கேள்விவைப்புக்களுக்குத் திரவச்சொத்துக்களின் விகிதம் .. .. .. .. | 57·7 | 50·9 | 52·3 | 60·1 | 54·2 | 47·9 | 45·5 | 47·5 | 50·7 | 55·4 | 56·2 | 57·0 | 58·2 | 58·8 |
| மொத்தவைப்புக்களுக்குத் திரவச்சொத்துக்களின் விகிதம் .. .. .. .. | 50·0 | 43·1 | 42·7 | 46·7 | 42·1 | 35·8 | 32·5 | 32·6 | 33·4 | 36·2 | 38·5 | 36·0 | 37·2 | 36·2 |
| மொத்தவைப்புக்களுக்கு முதலீடுகளின் விகிதம் .. | 31·2 | 34·7 | 32·1 | 28·2 | 39·9 | 31·9 | 32·0 | 29·8 | 28·5 | 28·0 | 25·1 | 25·0 | 26·8 | 24·4 |
| மொத்தவைப்புக்களுக்குக் கடன்கள் மேலதிகப்பற்றுக்களின் விகிதம் .. .. .. | 23·3 | 26·9 | 30·2 | 28·1 | 29·0 | 35·2 | 39·2 | 41·4 | 43·1 | 42·0 | 39·4 | 39·6 | 37·8 | 41·9 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

1. அரசாங்கப் பிணைகளும், அரசாங்க உத்தரவாதப் பிணைகளும், மகா வங்கி வெளியீடுகளும்.
2. உள்நாட்டு வங்கிகளிடையே உள்ள வைப்புக்களை உள்ளடக்கா.

## அட்டவணை II உ-10
## வைப்புக்களின் உடமையாளர்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| உடமையாளர்கள் | கேள்வி | | தவணை | | சேமிப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| **நிதிநிலையங்கள்** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 48·8 | 7·9 | 68·3 | 26·8 | 4· | 3·5 | 122·0 | 12·0 |
| 1963 ஆனி .. | 43·6 | 6·9 | 59·6 | 23·0 | 6·1 | 4·1 | 109·2 | 10·5 |
| 1963 மார்கழி .. | 46·7 | 7·0 | 64·9 | 21·8 | 5·4 | 3·3 | 117·0 | 10·4 |
| **தோட்டங்கள்** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 89·8 | 14·6 | 43·7 | 17·0 | 1·0 | 0·7 | 134·6 | 13·3 |
| 1963 ஆனி .. | 74·5 | 11·8 | 31·9 | 12·3 | 0·8 | 0·5 | 107·2 | 10·3 |
| 1963 மார்கழி .. | 76·3 | 11·5 | 38·8 | 13·0 | 0·7 | 0·4 | 115·8 | 10·3 |
| **வர்த்தகம்** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 100·5 | 16·3 | 20·7 | 8·1 | 2·0 | 1·4 | 123·2 | 12·2 |
| 1963 ஆனி .. | 139·9 | 22·1 | 24·4 | 9·4 | 2·5 | 1·7 | 166·8 | 16·0 |
| 1963 மார்கழி .. | 146·5 | 22·1 | 40·2 | 13·5 | 1·6 | 1·0 | 188·2 | 16·7 |
| **ஏனைய வியாபாரம்** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 93·2 | 15·1 | 39·2 | 15·4 | 3·1 | 2·2 | 135·5 | 13·4 |
| 1963 ஆனி .. | 82·4 | 13·0 | 19·4 | 7·5 | 4·5 | 3·0 | 106·3 | 10·2 |
| 1963 மார்கழி .. | 72·3 | 10·9 | 45·2 | 15·1 | 4·0 | 2·4 | 121·5 | 10·8 |
| **உள்ளூர் ஆட்சிச் சபைகள்** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 13·2 | 2·1 | 17·7 | 6·9 | 0·2 | 0·1 | 31·1 | 3·1 |
| 1963 ஆனி .. | 25·8 | 4·1 | 38·8 | 14·9 | 0·2 | 0·1 | 64·8 | 6·2 |
| 1963 மார்கழி .. | 29·9 | 4·5 | 17·5 | 5·9 | 0·3 | 0·2 | 47·7 | 4·2 |
| **வியாபாரத் தொடர்பற்ற நிலையங்கள்** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 38·2 | 6·2 | 13·7 | 5·4 | 3·1 | 2·2 | 55·0 | 5·4 |
| 1963 ஆனி .. | 37·9 | 6·0 | 25·3 | 9·7 | 4·0 | 2·7 | 67·2 | 6·4 |
| 1963 மார்கழி .. | 50·6 | 7·6 | 33·4 | 11·2 | 2·9 | 1·8 | 86·9 | 7·7 |
| **தனியாட்கள்** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 233·4 | 37·8 | 52·0 | 20·4 | 126·2 | 89·9 | 411·6 | 40·6 |
| 1963 ஆனி .. | 229·6 | 36·2 | 60·1 | 23·2 | 132·0 | 87·9 | 421·8 | 40·4 |
| 1963 மார்கழி .. | 240·7 | 36·3 | 58·2 | 19·5 | 149·3 | 90·9 | 448·3 | 39·8 |
| **மொத்தம்** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 617·0 | 100·0 | 255·3 | 100·0 | 140·6 | 100·0 | 1012·9 | 100·0 |
| 1963 ஆனி .. | 633·6 | 100·0 | 259·5 | 100·0 | 150·2 | 100·0 | 1043·3 | 100·0 |
| 1963 மார்கழி .. | 662·9 | 100·0 | 298·3 | 100·0 | 164·2 | 100·0 | 1125·4 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

கின்றவற்றை, 1133 இலட்ச ரூபாய்களால் அதிகரித்தன. மொத்த முற்பணங்களில் இலங்கை வங்கிகளது பங்கு, 1962ம் ஆண்டிற்குரிய 47.7 சதவீதத்திலிருந்து, 1963ம் ஆண்டு 54.0 சதவீதத்திற்கு உயர்ச்சியுற்றது. 1963ம் ஆண்டின் போது இலங்கை வங்கிகளால் வழங்கப்பட்ட முற்பணங்களின் அதிகரிப்பில் சந்தேகமின்றி ஒரு கணிசமான அளவு, கூட்டுறவுச் சங்கங்களுக்கான கொடுகடன் வசதிகளின் விரிவைப் பிரதிபலித்தது. நகரப் பிரதேசங்களிலும், ஊர்ப்பிரதேசங்களிலும் கொண்டு வரப்பட்ட தாபனங்களல்லாத மூலங்களிலிருந்து பெறப்பட்ட கொடுகடனும் இதற்கோர் காரணியாக இருந்திருக்கலாம். அட்டவணை II உ-11, வெளிநாட்டு வங்கிகளுக்கும் இலங்கை வங்கிகளுக்குமிடையேயுள்ள வங்கி முற்பணங்களின் பங்கீட்டை இணக்கமளிப்பு வகைகளின்படி பாகுபடுத்திக் காட்டுகின்றது.

## அட்டவணை II உ-11

### வர்த்தக வங்கி முற்பணங்கள், மார்கழி 1962/மார்கழி 1963

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | இலங்கை வங்கிகள் | | | வெளிநாட்டு வங்கிகள் | | | சகல வங்கிகளும் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மார். 1962 | மார். 1963 | மாற்றம் | மார். 1962 | மார். 1963 | மாற்றம் | மார். 1962 | மார். 1963 | மாற்றம் |
| (அ) திரட்டப்படும் நிலையிலிருக்கும் பணவிடயங்கள் | 61·1 | 79·6 | + 18·5 | 3·2 | 2·5 | – 0·7 | 64·4 | 82·1 | + 17·7 |
| (ஆ) உள்நாட்டு உண்டியல்கள் .. | — | — | — | 6·6 | 3·7 | – 2·9 | 6·6 | 3·7 | – 2·9 |
| (இ) இறக்குமதி உண்டியல்கள் .. | 15·5 | 28·4 | + 12·9 | 34·1 | 33·7 | – 0·4 | 49·6 | 62·1 | + 12·5 |
| (ஈ) ஏற்றுமதி உண்டியல்கள் .. | 8·5 | 11·1 | + 2·6 | 52·3 | 61·7 | + 9·4 | 60·8 | 72·8 | + 12·0 |
| (உ) மேலதிகப் பற்றுக்கள் .. | 87·1 | 119·7 | + 32·6 | 192·6 | 212·2 | +19·6 | 279·7 | 331·9 | + 52·2 |
| (ஊ) கடன்கள் .. | 127·8 | 174·6 | + 46·8 | 39·8 | 38·4 | – 1·4 | 167·7 | 213·0 | + 45·3 |
| மொத்தம் | 300·0 | 413·4 | +113·3 | 328·6 | 352·2 | +23·6 | 628·7 | 765·6 | +136·9 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

அளவைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, தேவைகளின்படியும், மீள்தற்காலங்களின்படியுமான வங்கி முற்பணங்களின் பாகுபாட்டை, அட்டவணை II உ-12 தருகின்றது. 1963ம் ஆண்டின் போது, வர்த்தகத் தேவைகளுக்கான முற்பணங்கள் முழுவதும் 760 இலட்ச ரூபாய்களாலும், ஏற்றுமதி வர்த்தகத்திற்கானவை 464 இலட்ச ரூபாய்களாலும், இறக்குமதி வர்த்தகத்திற்கானவை 38 இலட்ச ரூபாய்களாலும், ஏனைய தேவைகளுக்கானவை 308 இலட்ச ரூபாய்களாலும், அதிகரித்தன. நிதித்தேவைகளுக்கும், நுகர்ச்சித்தேவைகளுக்குமான கடன்கள் முறையே, 152 இலட்ச ரூபாய்களாலும், 129 இலட்ச ரூபாய்களாலும், வீழ்ச்சியுற்றன. விவசாயத்திற்கான முற்பணங்கள், தேயிலைத்தோட்டங்களுக்கான முற்பணங்களில் 33 இலட்ச ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பையும், கால்நடையும் பாற்பண்ணையும் உட்பட, ''ஏனைய'' விவசாயப்பயிர்களுக்கான முற்பணங்களில் 58 இலட்ச ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பையும் பிரதிபலித்து, 88 இலட்ச ரூபாய்களால் அதிகரித்தன. கைத்தொழிலுக்கான முற்பணங்கள் 173 இலட்ச ரூபாய்களால் அதிகரித்தன. எந்திரத்தொழில், கட்டட ஆக்கத்தொழில் ஆகியவற்றிக்கான முற்பணங்கள், 72 இலட்ச ரூபாய்களாலும், ஏனைய கைத்தொழில்களுக்கான முற்பணங்கள் 157 இலட்ச ரூபாய்களாலும் அதிகரித்தன. ஏனைய பல்வகைப்பட்ட தேவைகளுக்கான முற்பணங்கள் யாவும், 503 இலட்ச ரூபாய்களால் அதிகரித்தன. வங்கி முற்பணங்களின் மீள்தற்கால அமைப்பிலும் ஒரு முறைமாற்றம் ஏற்பட்டது. ஆறு மாதங்களுக்குட்பட்ட காலங்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள், மொத்த முற்பணங்களில் 36.3 சதவீதத்திலிருந்து 38.6 சதவீதத்திற்கு அதிகரித்திருக்கையில், ஆறு மாதங்களிலிருந்து 30 மாதங்கள் வரைக்கான பகுப்பைச் சேர்ந்தவை, 43.6 சதவீதத்திலிருந்து 35.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றன. இரண்டரை வருடங்களுக்கு மேற்பட்ட காலங்களுக்கான கடன்கள், 1962ம் ஆண்டுக்குரிய 20.1 சதவீதத்திலிருந்து, 1963ம் ஆண்டு 25.5 சதவீதத்திற்கு அதிகரித்தன.

## அட்டவணை II உ-12

### *தேவைகளின்படியும், மீள்தற்காலங்களின்படியும், பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்

| தேவை | குறுகிய கால (6 மாதத்திற்குள்) | | நடுத்தரகால (6 முதல் 30 மாதங்கள் வரை) | | நீண்டகால (30 மாதங்களுக்குமேல்) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) தொகை | (2) (1) (7)ன் சதவீதமாக | (3) தொகை | (4) (3) (7)ன் சதவீதமாக | (5) தொகை | (6) (5) (7)ன் சதவீதமாக | (7) தொகை | (8) (7) மொத்தத்தின் சதவீதமாக |
| **(அ) வர்த்தகம்** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 153·8 | 40·9 | 170·0 | 45·3 | 51·8 | 13·8 | 375·6 | 66·3 |
| 1963 ஆனி .. | 138·1 | 37·1 | 176·3 | 47·3 | 58·4 | 15·7 | 372·7 | 61·6 |
| 1963 மார்கழி .. | 196·0 | 43·4 | 182·4 | 40·4 | 73·2 | 16·2 | 451·6 | 65·4 |
| **(ஆ) நிதி** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 24·1 | 27·9 | 39·2 | 45·4 | 23·0 | 26·7 | 86·3 | 15·2 |
| 1963 ஆனி .. | 27·0 | 30·3 | 39·5 | 44·4 | 22·5 | 25·3 | 89·0 | 14·7 |
| 1963 மார்கழி .. | 18·7 | 26·3 | 26·1 | 36·7 | 26·4 | 37·1 | 71·1 | 10·3 |
| **(இ) விவசாயம்** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 5·9 | 34·9 | 4·0 | 23·7 | 7·0 | 41·4 | 16·9 | 3·0 |
| 1963 ஆனி .. | 6·4 | 28·4 | 6·3 | 28·0 | 9·7 | 43·1 | 22·5 | 3·7 |
| 1963 மார்கழி .. | 5·9 | 23·0 | 5·7 | 22·2 | 14·2 | 55·2 | 25·7 | 3·7 |
| **(ஈ) கைத்தொழில்** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 5·0 | 19·2 | 12·8 | 49·0 | 8·3 | 31·8 | 26·1 | 4·6 |
| 1963 ஆனி .. | 7·2 | 20·5 | 15·9 | 45·3 | 12·0 | 34·2 | 35·1 | 5·8 |
| 1963 மார்கழி .. | 8·6 | 19·8 | 16·7 | 38·5 | 18·0 | 41·5 | 43·4 | 6·3 |
| **(உ) நுகர்ச்சி** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 12·8 | 25·9 | 17·0 | 34·3 | 19·7 | 39·8 | 49·5 | 8·7 |
| 1963 ஆனி .. | 15·5 | 24·9 | 21·1 | 33·9 | 25·6 | 41·2 | 62·2 | 10·3 |
| 1963 மார்கழி .. | 7·7 | 21·0 | 10·0 | 27·3 | 19·0 | 51·9 | 36·6 | 5·3 |
| **(ஊ) ஏனைய கடன்கள்** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 3·6 | 31·0 | 3·7 | 31·9 | 4·2 | 36·2 | 11·6 | 2·0 |
| 1963 ஆனி .. | 9·7 | 40·4 | 8·0 | 33·3 | 6·3 | 26·3 | 24·0 | 4·0 |
| 1963 மார்கழி .. | 29·7 | 48·0 | 7·1 | 11·5 | 25·1 | 40·5 | 61·9 | 9·0 |
| **(எ) மொத்தம்** | | | | | | | | |
| 1962 மார்கழி .. | 205·3 | 36·3 | 246·8 | 43·6 | 114·0 | 20·1 | 566·1 | 100·0 |
| 1963 ஆனி .. | 203·8 | 33·7 | 267·1 | 44·1 | 134·5 | 22·2 | 605·4 | 100·0 |
| 1963 மார்கழி .. | 266·6 | 38·6 | 247·9 | 35·9 | 175·9 | 25·5 | 690·4 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*முற்பணங்களாவன, கடன்கள் மேலதிகப்பற்றுக்கள், கழிவுபட்ட உண்டியல்கள் ஆகியன வற்றை (திரட்டப்படும் நிலையிலிருக்கும் பண விடயங்களை நீக்கி) உட்படுத்தும்.

அட்டவணை II உ-13, தனிப்பட்டோர் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடனை, முற்பணங்களுக்கு எதிராக வழங்கப்பட்ட அடமானங்களின் வகைப்படி, பாகுபடுத்துகின்றது. கூட்டு நிலையப்பங்குகளாற் பெறப்பட்ட முற்பணங்களைத் தவிர்த்து, மற்றும் எல்லாவிதமான அடமானங்களுக்கும் எதிராக வழங்கப்பட்ட கடன்களை ஏற்க மறுத்த அரசாங்கப்பிணைகள், 1963ம் ஆண்டின் போது முற்றுக விரிவடைந்தமை, கவனிக்கத்தக்கதாயிருந்தது. வியாபாரக் கையிருப்பையும், உண்டியல்களையும் அடமானமாகக் கொண்டு பெறப்பட்ட முற்பணங்களின் ஒன்று சேர்ந்த தொகுதி, மொத்த முற்பணங்களில், 1962ம் ஆண்டு மார்கழி மாதத்தில் 48.7 சதவீதமாக இருந்ததற்கெதிராக, 1963ம் ஆண்டு மார்கழி மாதம் 49.5 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

## அட்டவணை II உ-13

### அடமானங்களின் வகைப்படி பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்*

| அடமானத்தின் வகை | 1962 மார்கழி 31 | | 1963 ஆனி 30 | | 1963 மார்கழி 31 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை ரூ. ப. இ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ரூ. ப. இ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ரூ. ப. இ. | மொத்தத்தின் சதவீதமாக |
| உண்டியல்கள் .. .. | 135·1 | 23·9 | 118·4 | 19·6 | 141·5 | 20·5 |
| அரசாங்கப்பிணைகள் .. .. | 12·7 | 2·2 | 11·9 | 2·0 | 5·9 | 0·8 |
| கூட்டுநிலையங்களின் பங்குமுதல் .. | 31·2 | 5·5 | 30·5 | 5·0 | 18·6 | 2·7 |
| தவணை, சேமிப்பு வைப்புக்களும் ஏனைய பணவைப்புக்களும் (ஆயுட் காப்புறுதிகளின் பணப் பெறுமானம் உட்பட) .. .. | 26·9 | 4·8 | 33·3 | 5·5 | 30·9 | 4·5 |
| வியாபார இருப்புக்கள் .. .. | 140·8 | 24·9 | 149·8 | 24·7 | 200·6 | 29·0 |
| அசைவற்ற சொத்து .. .. | 50·3 | 8·9 | 58·8 | 9·7 | 68·8 | 10·0 |
| ஏனையவை .. .. .. | 99·3 | 17·5 | 129·9 | 21·5 | 133·5 | 19·3 |
| பிணையற்றவை .. .. | 69·8 | 12·3 | 72·9 | 12·0 | 90·7 | 13·1 |
| மொத்தம் | 566·1 | 100·0 | 605·4 | 100·0 | 690·4 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*திரட்டப்படும் நிலையிலிருக்கும் பண விடயங்களை நீக்கி.

1963ம் ஆண்டில் ஏற்பட்ட முற்பணங்களின் அதிகரிப்பில் அநேகமானவை, வருடத்திற்கு 6 சதவீதமானதும், 7 சதவீதமானதுமான வட்டி விகிதங்களைக் கொண்டிருந்தன என்பது, அட்டவணை II உ-14ல் இருந்து காணக்கூடியதாக இருக்கின்றது. மிகக்கூடிய விகிதசமமாகவுள்ள வெளி நிற்கும் முற்பணங்கள், தொடர்ந்து 6 சதவீத வட்டியைக் கொடுக்கின்றன. எனினும், மொத்த முற்பணங்களில் 6 சதவீத வட்டியை உழைக்கின்றவை, 1962ம் ஆண்டு முடிவிற்குரிய 47.4 சதவீதத்திலிருந்து, 1963ம் ஆண்டு மார்கழி மாதம் 44.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றிருக்கையில், 7 சதவீத வட்டியை உழைக்கும் முற்பணங்கள், மொத்த முற்பணங்களில் 25.7 சதவீதத்திலிருந்து 27.4 சதவீதத்திற்கு அதிகரித்தன. வருடத்திற்கு 4 சதவீதம், 6½ சதவீதம், 7½ சதவீதம் ஆகிய வட்டிகளைக் கொண்டுள்ள முற்பணங்கள், மொத்த முற்பணங்களின் விகிதசமமாகவும், உண்மை ரீதியின் படியாகவும், ஓரளவு வீழ்ச்சியுற்றன.

## அட்டவணை II உ-14

### வட்டிவிகிதங்களின்படியுள்ள முற்பணங்கள்*

| வட்டி விகிதம் % | 1962 மார்கழி 31 | | 1963 ஆனி 30 | | 1963 மார்கழி 31 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | மொத்தத்தின் சதவீதமாக | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | மொத்தத்தின் சதவீதமாக | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | மொத்தத்தின் சதவீதமாக |
| 2½ கீழ் .. .. .. | 3·3 | 0·7 | 4·4 | 0·8 | 4·8 | 0·8 |
| 2½ .. .. .. .. | ... | ... | 0·6 | 0·1 | 0·3 | ... |
| 3 .. .. .. .. | 1·6 | 0·3 | 2·2 | 0·4 | 1·4 | 0·2 |
| 3½ .. .. .. .. | 5·4 | 1·1 | 5·0 | 0·9 | 15·3 | 2·5 |
| 4 .. .. .. .. | 8·8 | 1·7 | 11·9 | 2·2 | 2·0 | 0·3 |
| 4½ .. .. .. .. | 12·9 | 2·5 | 17·0 | 3·2 | 10·7 | 1·7 |
| 5 .. .. .. .. | 31·6 | 6·2 | 29·9 | 5·6 | 52·0 | 8·4 |
| 5½ .. .. .. .. | 17·2 | 3·4 | 13·6 | 2·6 | 12·3 | 2·0 |
| 6 .. .. .. .. | 240·0 | 47·4 | 244·5 | 46·1 | 273·3 | 44·2 |
| 6½ .. .. .. .. | 34·5 | 6·8 | 30·4 | 5·7 | 27·9 | 4·5 |
| 7 .. .. .. .. | 130·0 | 25·7 | 152·9 | 28·8 | 169·6 | 27·4 |
| 7½ .. .. .. .. | 9·9 | 2·0 | 7·4 | 1·4 | 5·8 | 0·9 |
| 8உம் அதற்கு மேலும் .. | 11·0 | 2·2 | 11·1 | 2·1 | 43·3 | 7·0 |
| மொத்தம் .. | 506·2 | 100·0 | 530·9 | 100·0 | 618·8 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*நடைமுறைச் செலாவணி விகிதங்களில் வாங்கிய ஏற்றுமதி உண்டியல்களையும், திரட்டப்படும் நிலையிலிருக்கும் பண விடயங்களையும் நீக்கி.

3. சேமிப்பு நிலையங்களும், நீண்டகாலத்தவணைக்கொடுகடன் நிலையங்களும்

*1961*ம் ஆண்டு தொடக்கம் *1963*ஆண்டு வரையுள்ள ஒவ்வொரு வருடத்திற்குமான, நீண்ட காலத்தவணைக் கொடுகடன் நிலையங்களின் கடன் வழங்கும் தொழிற்பாடுகளை, கீழ்க்காணும் அட்டவணை II உ-*15* பாகுபடுத்துகின்றது.

### அட்டவணை II உ-15

### நீண்டகாலத்தவணைக்கொடுகடன் நிலையங்களின் கடன் வழங்கும் தொழிற்பாடுகள்

ஆயிரம் ரூபாய்களில்

| | 1961 | | 1962 | | 1963 | |
|---|---|---|---|---|---|---|
| | வழங்கிய கடன்கள் | வெளி நின்ற தொகை | வழங்கிய கடன்கள் | வெளி நின்ற தொகை | வழங்கிய கடன்கள் | வெளி நின்ற தொகை |
| அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்* | 4,318 | 20,931 | 3,555 | 22,841 | 1,864 | 23,072 |
| இலங்கை சேமிப்பு வங்கி .. | 2,435 | 10,302 | 2,801 | 11,635 | 3,339 | 13,387 |
| விவசாய தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனம் .. .. | 2,905 | 30,706 | 2,477 | 29,874 | 3,334 | 29,501 |
| தேசிய ஈட்டு வங்கி .. .. | 5,442 | 56,994 | 2,553 | 55,785 | 3,135 | 55,119 |
| கடன் சபை .. .. | 2,284 | 11,937 | 1,660 | 12,309 | 1,033 | 12,203 |
| தேசிய வீடமைப்புத் திணைக்களம்** | 13,880 | வி.கி. | 9,799 | வி.கி. | 9,208 | வி.கி. |
| மொத்தம் | 31,264 | 130,870 | 22,845 | 132,444 | 21,913 | 133,282 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*ஒப்புரவு முதலீடுகளையும் உட்படுத்தும்.
**ஐப்பசி/புரட்டாதி நிதியாண்டு.
**திணைக்களத்திட்டங்களையும் உட்படுத்தும்.

*1963*ம் ஆண்டின் போது, அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், இலங்கைச் சேமிப்பு வங்கி, விவசாயத் தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனம், தேசிய ஈட்டு வங்கி, கடன்சபை, தேசிய வீடமைப்புத் திணைக்களம் ஆகியவற்றால் வழங்கப்பட்ட கடன்களின் ஒன்று சேர்ந்த தொகுதி, *1962*ம் ஆண்டுக்குரிய *228* இலட்ச ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், *1963*ம் ஆண்டு *219* இலட்ச ரூபாய்களாக இருந்தமை காணக்கூடியதாக இருந்தது. தேசிய வீடமைப்புத் திணைக்களத்தைவிட, மேற்கூறப்பட்ட தாபனங்களுக்குக் கடன்படுபவர்களிடமிருந்து வெளிநின்ற கடன்களின் மொத்தத் தொகுதி, *1962*ம் ஆண்டு மார்கழி மாதத்திற்குரிய *1324* இலட்ச ரூபாய்களிலிருந்து, *1963*ம் ஆண்டு *1333* இலட்ச ரூபாய்களுக்கு உயர்ச்சியுற்றது.

### அட்டவணை II உ-16

### சேமிப்பு வைப்புக்களும் சேமநிதிப் பத்திரங்களும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | மார்கழி 1962 | மார்கழி 1963 | மாற்றம் மார். '62/ மார். '63 |
|---|---|---|---|
| தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி .. .. | 362·3 | 368·5* | + 6·2* |
| இலங்கை சேமிப்பு வங்கி .. .. .. | 75·4 | 75·1* | — 0·3* |
| வர்த்தக வங்கிகள் (தவணை சேமிப்பு ஆகிய வைப்புக்கள்)* .. .. .. | 426·4 | 499·2 | + 72·8 |
| சேமநிதிப்பத்திரங்கள் (நிலுவையில் உள்ளவை) .. | 32·9 | 34·4 | + 1·5 |
| மொத்தம் .. .. .. .. | 897·0 | 977·2* | + 80·2* |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*தற்காலிகமானவை.
**அரசாங்க வைப்புக்களையும் உட்படுத்தும்.

வர்த்தக வங்கிகள், தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி ஆகியவற்றிடமிருந்த, சேமிப்புப் பத்திரங்களினதும், சேமிப்புகளினதும், நிலையான வைப்புக்களினதும் ஒன்று சேர்ந்த தொகுதி, கடந்த வருடத்திலிருந்த 733 இலட்ச ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டு 8970 இலட்ச ரூபாய்களிலிருந்து 9772 இலட்ச ரூபாய்களுக்கு, 802 இலட்ச ரூபாய்களால் அதிகரித்தது. ஊழியர் சேம நிதியினூற் திரட்டப்பட்ட நிதி, 1962ம் ஆண்டிற்குரிய 577 இலட்ச ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டின் போது 585 இலட்ச ரூபாய்களாக இருந்தது.